# பொன்னி

PONNI • 25-4-52 • 4 அணா



OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 MAY 952
MADRAS

## சிறந்த புதிய வெளியீடுகள்!

★

| | | |
|---|---|---|
| நினைவுச் சின்னம் | இளமைப்பித்தன் | 1—0—0 |
| கடல் முத்து | எஸ். ஆறுமுகம் | 1—0—0 |
| உலக அரங்கில் — | டி. கே. சீனிவாசன் | 1—0—0 |
| தபாலாபீஸ் விநோதங்கள் | க. சண்முகசுந்தரம் | 0—8—0 |
| இலக்கியச் சந்தையில் | மு. அண்ணமலை | 0—8—0 |
| கம்பன் கெடுத்த காவியம் | ,, | 0—4—0 |
| வீடும் விளக்கும் | சுகி | 0—8—0 |
| தாஜ்மஹால் | நா. பாண்டுரங்கன் | 0—8—0 |
| விஞ்ஞானத்தில் அண்ணு | (தொகுப்பு நூல்) | 0—8—0 |
| கொடி முல்லை | வாணிதாசன் | 0—12—0 |
| வருங்காலத் தமிழகம் | கா. அப்பாத்துரை | 0—12—0 |
| சங்க இலக்கிய மாண்பு | ,, | 0—6—0 |
| இந்திய மொழிச் சிக்கல் | ,, | 2—8—0 |
| ஏழையின் அரசியல் | எஸ். சதாசிவம் | 0—8—0 |
| எகிப்து நாட்டு எழிலரசி | நிலவழகன் | 1—0—0 |
| இரத்த வெள்ளம் | ,, | 0—10—0 |
| இரணகளம் | தமிழன்பன் | 0—8—0 |

★

விவரங்கட்கு:

**பொன்னி லிமிடெட்**

சென்னை—21




௱211,N47P0
N52.6.6
197810

# உங்களுக்கு நான்கு நண்பர்கள் இல்லையா?

**'பொன்னி' உங்களுக்கு இலவசமாக வர இதோ அரிய சந்தர்ப்பம்!**

1. பெயர் ____________________
   விலாசம் ____________________
2. பெயர் ____________________
   விலாசம் ____________________
3. பெயர் ____________________
   விலாசம் ____________________
4. பெயர் ____________________
   விலாசம் ____________________
5. பெயர் ____________________
   விலாசம் ____________________

மேற்குறிப்பிட்ட முதல் நான்கு விலாசங்களுக்கு 'பொன்னி' ஒரு ஆண்டுக்கு—ஆறு மாதத்திற்கு அனுப்பிவைப்பதற்காகச் சந்தாத் தொகை ரூ. 24 அல்லது 12 இன்று M. O. செய்திருக்கிறேன். 5-வது இடத்தில் குறிப்பிட்டுள்ள என் விலாசத்திற்கும் ஒரு ஆண்டுக்கு ஆறுமாதத்திற்கு இலவசமாகப் 'பொன்னி' அனுப்பவேண்டுகிறேன்.

ஊர்....................

தேதி....................

சந்தா

**ஆறு மாதம் ரூ. 3—0—0**
**ஒரு ஆண்டு ரூ. 6—0—0**

____________________

கையெழுத்து

........................................................................

இந்தப் பாரத்தைப் பூர்த்திசெய்து இன்றே அனுப்புங்கள்; இச் சலுகை தீருவதற்குள் உங்கள் பெயர்களைப் 'பொன்னி' சந்தாப் பதிவில் இடம்பெறச் செய்யுங்கள்.

## தலைப்புக்குப் பரிசு!

பகையும் சிகரெட்டைப் 'பொன்னி' மேலட்டையில் கண்ட நண்பர்கள் வகை வகையான தலைப்புகளை வழங்கியிருக்கிறார்கள். தமிழர் வாழ்வில் இடையில் புகுந்த புதுமை சிகரெட் பழக்கம்—ஆம்—புதிய நிலைமை என்றும் சொல்லலாம். ஆனால் அதன் ஆட்சிப் பரப்பு பெரிதாக வளர்ந்துவிட்டிருப்பதை யாரும் மறுக்க முடியாது. நம் தலைப்புப் போட்டியில் கலந்து கொண்டவர்களில் பலர் தங்கள் அனுபவங்களையே வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்பதும் மிகையல்ல; புதிய சூழ்நிலையிலும் வளமான கற்பனை உருவாக முடியும் என்று நண்பர்கள் மெய்ப்பித்துவிட்டார்கள்.

வரலாறு காட்டும் 'குதுப் மினார்' இந்த இதழ் மேலட்டையில் திகழ்கிறது. திரு. என். ராமகிருஷ்ணா அளித்த நிழற்படம்தான் இதுவும். சரித்திரம் படித்த மாணவர்களுக்குக் குதுப் மினாரின் அருமை பெருமைகளைக் கூறவேண்டியதில்லை. டில்லிக்குப் பத்துமைல் தொலைவில் 238 அடி உயரத்தில் வானளாவி நிற்கும் கோபுரம் குதுப்மினார். பிரிதிவிராஜிடமிருந்து டில்லியைக் கைப்பற்றிய குத்புதீன் அதன் நினைவாக 1193-ல் இக் கோபுரத்தை எழுப்பினான். குத்புதீன் வாழ்நாள் முடிவுற்றது; அவனுடைய பரம்பரை ஆட்சியைவிட்டு நீங்கிற்று; அவர்களையடுத்து டில்லியை ஆண்ட எத்தனையோ மன்னர்கள் இருந்த இடம் தெரியாமல் மண்ணாகிப் போனார்கள்! ஆனால் எண்ணூறு ஆண்டுகளாகியும் குதுப்மினார் நிலைபெற்று விளங்குகிறது. கட்டிடக் கலையின் வெற்றிச் சின்னமாக அது காட்சி தருகிறது. உங்கள் தலைப்பு சோடனைக்குக் கருத்துரை போதுமல்லவா? தலைப்புகளை உடனே அனுப்புங்கள். **5-5-52க்குள்** கிடைக்கும் தலைப்புக்கு ரூ. **5** பரிசு அளிக்கப்படும்.

# பொன்னி

## பொருளடக்கம்


| மலர் 6 | ஏப்ரல் 25, 1952 | இதழ் 6 |
| --- | --- | --- |

திருவள்ளுவர் ஆண்டு 1983
சித்திரைத்திங்கள் 13-ம் நாள்



| | | |
| --- | --- | --- |
| தலைப்புக்குப் பரிசு | ... | 3 |
| சரிந்துவிழும் காங்கிரஸ் | ... | 4 |
| இலங்கை இந்தியர் | ... | 5 |
| வெறும் கலாட்டா! | ... | 8 |
| காரணம் புரிந்தது! | ... | 12 |
| கடவுள் | ... | 14 |
| மனோரஞ்சிதம் (சிறுவர் தொடர்கதை) | ... | 17 |
| இலங்கைச் செய்திகள் | ... | 20 |
| ஆடும் மாடும் (தொடர்கதை) | ... | 21 |
| பொழுது போக்கு | ... | 29 |
| படிக்கலாமா? | ... | 31 |
| செல்லாத ரூபாய் | ... | 33 |
| விளம்பரமும் திருத்தமும் | ... | 42 |
| குழந்தை | ... | 44 |
| சுகந்தியின் புட்வை | ... | 50 |
| விலக்கப்பட்டவன் | ... | 57 |


★


பொன்னி சந்தா விவரம்: உள்நாடு, இலங்கை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6—0—0, ஆறுமாதம் ரூ. 3—0—0. வெளிநாடு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6-12-0; ஆறுமாதம் ரூ. 3-6-0. இலங்கைக்கு வி.பி.பி. உண்டு.




சரிந்து விழும் சென்னைக் காங்கிரஸை ஆச்சாரியார் தலைமை தடுத்தாட்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# இலங்கை இந்தியர்

இலங்கையில் திடீரென்று பொதுத்தேர்தல் நடக்கவிருப்பது அனைவருக்கும் தெரிந்த செய்தியே. சேனநாயகா மறைவுக்குப் பின் பதவிக்கு வந்திருக்கும் டட்லி சேனநாயகா தமக்கு நிரந்தர ஆதரவு தேடிக்கொள்வதற்காக விரைந்து தேர்தலை வைத்திருக்கிறார். தம் தந்தையாரின் மறைவு குறித்து நாட்டில் ஏற்பட்டிருக்கிற அனுதாப உணர்ச்சி மறைவதற்குமுன் தேர்தலை நடத்தி முடித்துவிட வேண்டுமென்பது அவர் ஆசை. அந்த ஆசையை அவர் நிறைவேற்றிக் கொள்வதில் யாதொரு தடையும் இல்லை. ஆனால் இலங்கை இந்தியர் விஷயத்தில் இலங்கை சர்க்கார் காட்டும் ஓரவஞ்சகம் ஆச்சரியப்படத்தக்க அநீதியாக இருக்கிறது! நடைபெறப்போகும் தேர்தலில் ஏறக்குறையப் பத்து லட்சம் இந்தியர்கள் தங்கள் பிரதிநிதித்துவத்தை இழக்கப்போகிறார்கள். அவர்களுடைய பிரதிநிதிகளாகத் தற்போது பார்லிமெண்டில் இருக்கும் ஏழு பேர் இத்தேர்தலில் போட்டியிட முடியாது! முன்னிருந்த வாக்காளர் ஜாபிதா $2\frac{1}{2}$ லட்சம் இந்தியர்களுக்கு வாக்குரிமை அளித்திருந்தது. புதிய சட்டப்படி அந்த உரிமை பறிக்கப்பட்டுப் புது விண்ணப்பங்கள் கோரப்பட்டன. $2\frac{1}{2}$ லட்சம் பேர் வாக்குரிமை கோரி விண்ணப்பம் போட்டிருக்கிறார்கள். ஆனால் அந்த மனுக்களில் 8,000 மனுக்களே பரிசீலனை முடிந்து வாக்குரிமை வழங்கப்பட்டிருக்கின்றன. மற்ற மனுக்கள் அரசாங்கக் காரியாலயங்களில் தூங்குகின்றன. இந்நிலையில் தேர்தல் அவசர அவசரமாக வருகிறது! அவசரமாகத் தேர்தலை நடத்தும் சர்க்கார் தங்கள் கவனிப்பின்மையால் வாக்குரிமை இழந்து நிற்கும் லட்சக்கணக்கான இலங்கை இந்தியருக்குப் பதில் சொல்லவேண்டுமல்லவா? சட்டத்தில் இடமில்லையென்று கையை விரிக்கிறது.

இலங்கை இந்தியக் காங்கிரஸ் பதுளையில் கூடி நெருக்கடியான இந்நிலையைப் பரிசீலனை செய்து பல முடிவுகளைச் செய்திருக்கிறது. இலங்கையில் புத்தில் ஒரு பங்கினரான இலங்கை இந்தியருக்கு வாக்குரிமை பெறுவதற்கு அறப்போர் தொடங்குவதென அங்கே முடிவு செய்திருக்கிறார்கள். அந்த முடிவுக்கு இலங்கையிலுள்ள முற்போக்குக் கருத்தினரின் ஆதரவும் இருக்குமென்று தெரிகிறது. போராட்டம் வலுப்பெற்று உரிமை நிலை பெறுமென்பதில் ஐயமில்லை. இச்சமயத்தில் இந்திய அரசினர் விரைந்து செயலாற்றுவது அவசியம். இதுவரையில் அயல் நாட்டிலுள்ள தமிழர்களின் உரிமைகளைப் பெற்றுத் தருவதில் இந்திய அரசாங்கம் பராமுகமாக இருந்து வந்திருக்கிறதென்பது பெருங்குறை. ஆட்சேபனையைச் சடங்கு போலத் தாக்கல் செய்வதும் பின்னர்க் காரியம் ஆற்றாமல் தூங்குவதும் இனிப் பயனில்லை. இலங்கை இந்தியர் நிலையை உலகினர் கண் முன் கொண்டுவரும் பொறுப்பு நேரு சர்க்காரைச் சேர்ந்தது. காமன்வெல்த்தில் இணைந்திருக்கும் இந்தியா, இலங்கை சர்க்காரை நேர்வழி நடக்கும்படிச் செய்வது அவ்வளவு கடினமல்ல. மேலும் இலங்கையில் வாழும் இந்தியர், இலங்கையையே தங்கள் தாயகமாகக் கொண்டுவிட்டவர்கள். 'சேற்றில் ஒரு கால், ஆற்றில் ஒரு கால்' என்ற நிலையை விரும்பாதவர்கள். பெரும்பாலோர் தொழிலாளர்கள், இலங்கையை வளங்கொழிக்கும் நாடாக மாற்றினார்கள். 'அவர்கள் கோரும் உரிமை புறக்கணிக்கப்படக் கூடியதல்ல—இலங்கை சர்க்கார் இந்தியரின் அவல நிலையைப் பயன்படுத்திக் கொண்டு விளையாட நினைக்கிறார்கள். அதற்குச் சாதகமாக இந்தியா நடந்து கொள்வது அழகல்ல. சென்னை ராஜ்ய சர்க்கார், நேரு சர்க்காரை இவ்விஷயத்தில் உடனடியாகக் கருத்துச் செலுத்துமாறு வற்புறுத்த வேண்டும். இலங்கை இந்தியர் பிரச்னை, உலகப் பிரச்னையாக மாறவேண்டும். உலகினரின் ஒருமித்த அனுதாப உணர்வு இலங்கை இந்தியருக்குக் கிடைக்கவேண்டும். அத்தகைய சூழ்நிலையை வருவிப்பது நேரு நினைத்தால் முடியாத காரியமல்ல. இலங்கை சுதந்திரம் பெற்றுவிட்டது. எனினும் அங்குள்ளோரில் குறிப்பிட்ட எண்ணிக்கையினருக்கு அச்சுதந்திரம் சமமாகப் பங்கிடப்படவில்லை. இது மிகக் கேவலமான நிலை. இலங்கை சர்க்கார் இந்த நிலையை எண்ணிப் பார்க்கும்படி செய்யவேண்டும். அப்போதுதான் இலங்கை இந்தியக் காங்கிரஸ் தன் முயற்சிகளில் முழுவெற்றிபெறமுடியும். அந்த வெற்றி அவர்களுக்கு விரைவில் கிடைக்க வேண்டுமென நாம் விரும்புகிறோம்.

வெகு விரைவினில் வெளிவருகிறது!




புக்கிங் விவரங்கட்கு :

**G. P. பிலிம்ஸ்,** 'நாடார்ஸ் கார்டன்'

9, டாக்டர் அழகப்ப செட்டியார் ரோடு,

வேப்பேரி — மதராஸ்-7

பிராஞ்ச் :— P. B. 46. 301, மேலமாசி வீதி, மதுரை

# வெறும்  கலாட்டா!

## பிரார்த்தனை

அரசாங்கம் ஒரு விசித்திரமான இயந்திரம். அது வெள்ளைக்காரன் கையிலிருந்தாலும் சரி—நம் கையிலிருந்தாலும் சரி—அது தன் இயல்பை மாற்றிக்கொள்வதே இல்லை. உருப்படியாகாத திட்டங்களை வைத்துக்கொண்டு ஏராளமான வரிப்பணத்தை வாரியிறைக்க அந்த இயந்திரம் என்றும் தயங்குவதே இல்லை. இரண்டாவது உலக யுத்தம் நடந்தபோது 'தேசிய யுத்த முன்னணி' என்று ஊரூராக ஏற்படுத்திப் பலபிரமுகர்களுக்கு வேலை ஏற்படுத்திச் சர்க்கார் பணத்தைக் கரியாக்கினார்கள். அதனால் சர்க்காருக்கு ஏதாவது பலன் ஏற்பட்டதா என்றால் ஒரு சிறிதுமில்லை! முன்ஷியின் வனமகோத்ஸவம் இத்தகைய திருக்கூத்துத்தான்! கோடிக்கணக்கில் பணம் செலவாயிற்று; ஆனால் ஒரு மரம்கூட வளரவில்லை. 'உணவு உற்பத்தியைப் பெருக்குங்கள்' என்று பத்திரிகைகளில் விளம்பரம் வருவதைப் பலர் பார்த்திருக்கலாம். சர்க்கார் இயந்திரம் மேற்கொள்ளும் திட்டங்கள் எவ்வளவு காரிய சாத்தியமற்றவை என்பதற்கு இதுவும் ஒரு உதாரணம். உணவு உற்பத்தியைப் பெருக்க வேறு வழி இருக்கிறது! பத்திரிகைகளில் விளம்பரம் போட்டால் புது விளம்பரம்தான் உற்பத்தியாகும்; புதுப் பத்திரிகைகள்தான் உற்பத்தியாகும். எப்படி உணவு உற்பத்தியாகும்? இந்தத் திட்டப்படி கோடிக்கணக்கில் மத்திய சர்க்காரும் மாகாண சர்க்காரும் போட்டி போட்டுப் பணம் செலவழித்தார்கள்—செலவழித்துக்கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் வந்ததே—சுயராஜ்யம் வந்ததே, ஏன் அரசாங்கம் காரிய சாத்தியமாக நடக்கக்கூடாது என்று நாம் கேட்கலாம். ஆனால் நாயின் வாலை நிமிர்த்துவது எளிதா?

ராஜாஜி சர்க்கார் திறமையான நிர்வாகம் நடத்தப்போவதாக எங்கும் பேச்சாயிருக்கிறது. மகிழ்ச்சியடையவேண்டிய காரியம். ஆனால் அந்த அரசாங்க இயந்திரம் ராஜாஜி வந்துவிட்டார் என்பதற்காகத் தன் போக்கை மாற்றிக்கொண்டு விடும் என்று சிலர் எதிர்பார்க்கிறார்களே, அவர்களுக்காக நாம் பரிதாபப்படுகிறோம். அந்த இயந்திரம் மாமூல்படி வேலை செய்யத் தொடங்கிவிட்டது. ராஜாஜி பதவி யேற்றவுடன் மழைக்காகப் பிரார்த்தனை செய்

யும்படி மக்களை வேண்டிக் கொண்டாரல்லவா? அதிகார வர்க்கத்தாருக்கு ஒரு சிறு குறிப்புப் போதாதா? 'பிரார்த்தனை முன்னணி' எங்கும் தொடங்கப்பட்டு வருகிறது. காங்கிரஸ் பிரமுகர்கள் பிரார்த்தனைக் கூட்டங்களைக் கடற்கரையிலும் மணல் வெளியிலும் நடத்துவதைக் குறிப்பிடவில்லை. அது அவர்கள் கடமை; செய்கிறார்கள்! மழை வருவது ஈசன் கையிலிருக்கிறது என்பதும் அவர்கட்குத் தெரியும். ஈரோடு தாலுகாவிலிருந்து ஒரு செய்தி. அங்கே தண்ணீருக்குக் கஷ்டம் ஏற்பட்டுவிட்டதால் அந்தத் தாலுகா டிபுடிகலெக்டரிடம் சென்று உள்ளூர்ப் பிரமுகர்கள் ஈரோடு தாலுகாவைப் பஞ்சப் பிரதேசமாக அறிவிக்கவேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அவர்களுக்கு டிபுடி கலெக்டர் கூறிய பதில் பத்திரிகையில் கொட்டை எழுத்துக்களில் வந்திருக்கிறது. "மழைக்காகப் பிரார்த்தனை செய்யுங்கள்" என்பதுதான் அவர் பதிலின் சாரம். பிரார்த்தனை முன்னணி தொடங்கிவிட்டது என்று நாம் குறிப்பிட்டது இந்த நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்துத்தான்! இனி என்னென்ன கூத்து நடக்குமென்று பாருங்கள். எங்கு பார்த்தாலும் பிரார்த்தனைக் கூட்டங்கள் நடைபெறலாம்; அதிகாரிகள் அக் கூட்டங்களில் கலந்துகொண்டு பிரார்த்தனை செய்வார்கள். நேசநாடுகளின் வெற்றிக்காகப் பிரார்த்தனை செய்து பழக்கம் இருக்கிறது

---


# மாதவிடாய் நின்றுபோனதா?

**நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்)** Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் சிலவு தனி)

# கர்ப்பதடை

**நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)**
Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஒளஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறுதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவைத் தடுக்கும். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் சிலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.
கிளை பிரானசு 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.
சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 82 MAIN ST. கொழும்பு-11.

அவர்களுக்கு— கூட்டங்களில் கலந்துகொண்டு பிரார்த்தனை செய்ய இயலாத பிரமுகர்கள் இனிப் பத்திரிகை மூலம் தங்கள் பிரார்த்தனையை ஆண்டவனுக்குத் தெரிவிக்க முன்வரலாம்! நடக்கட்டும் பிரார்த்தனை! காசு பணம் செலவில்லாத காரியம் தானே, அமோகமாக நடக்கட்டும்!

'மழை பெய்வது நம் கையில் இல்லை—அது ஆண்டவன் நினைத்தால்தான் உண்டு' என்று பேசுவது இப்பொழுது 'பேஷன்' ஆகிவிட்டது. மந்திரிகள் பேசுகிறார்கள்; கட்டப் பொம்மன் பரம்பரையில் வந்தவர்களென்று மீசைமுறுக்கும் சிங்கத் தமிழர்கள் பேசுகிறார்கள்; விஞ்ஞானிகள் பேசுகிறார்கள்; பிரபல பத்திரிகாசிரியர்கள் பேசுகிறார்கள். இத்தனை பெரியவர்கள் ஆதரவு தரும் ஒரு விஷயத்தில் நாம் தலையிட்டுக் கெட்ட பெயர் எடுக்கவேண்டியதில்லை. ரஷ்யாவிலும் அமெரிக்காவிலும் மழையை வரவழைத்துவிடுகிறார்கள் விஞ்ஞானிகள் என்று செய்திகள் வருகின்றன. நாம் நேரில் பார்த்தாலொழிய எப்படி அந்தச் செய்திகளை நம்பமுடியும்? நேரில் பார்க்காத கடவுளை மட்டும் நம்புவோம்; ஆச்சாரியாரை நமக்கு 'ஆபத் பாந்தவராக' அனுப்பியிருக்கிறாரல்லவா, அவரை, அதற்காக வேனும் நம்புவோம்; மழை அவர் அளிக்கும் பிச்சை என்று எதிர்பார்த்துக் காத்திருப்போம்!

சென்னையில் தண்ணீர்க்கஷ்டம் என்றால் அது வேடிக்கைதான்! பக்கத்தில் கண்ணுக்கெட்டிய தொலைவில் கறுப்பாகத்தெரியும் கடல்! அதனை நாள் தவறாமல் பார்த்துக் கொண்டிருக்கும் சென்னை மக்கள் தண்ணீருக்கும் கஷ்டப்படுவதா? கடல்தண்ணீரை குடிக்கும் நீராக எளிதில் மாற்றி விடலாமென்று அமெரிக்காவில் ஆராய்ச்சி நடத்திக் கண்டுபிடித்திருக்கிறார்களாம். ஆயிரம் காலன் தண்ணீரை இவ்வாறு மாற்ற மூன்றணாத்தான் செலவாகிறதாம்! இந்தச் செய்தி சென்னை அரசாங்கத்தின் கண்ணிலும் கார்ப்பரேஷன் கமிஷனர் கண்ணிலும் பட வேண்டுமென்று பிரார்த்திப்போமாக!

சேலத்திற்கு மேட்டூர்த் தண்ணீர் வந்துவிட்டது. ஆச்சாரியார் அந்த விழாவை நடத்தச் சென்றவர் தண்ணீரைப்பற்றி, 'அரிய' விஷயங்களை வெளியிட்டிருக்கிறார். கடவுளின் வடிவம்தான் தண்ணீர் என்றும், பயபக்தியுடன் குழாய்த் தண்ணீரை உபயோகப் படுத்த வேண்டுமென்றும் காவேரியைக் கண்டுகொண்ட சேலம் மக்களுக்கு உபதேசம் செய்திருக்கிறார். தண்ணீரைக் கடவுளுக்கு ஒப்பிட்டது எவ்வளவு பொருத்தம் நம் ஆச்சாரியாரின் புத்திக்கூர்மையை எவ்வளவு பாராட்டினாலும் தகும்! சென்னையில் கார்ப்பரேஷன் குழாய்களில் இப்போது

தண்ணீர் வருவது எவ்வளவு அபூர்வம்! எப்போதோ, எந்த நிமிஷத்திலோ சில சொட்டுக்களைக் காட்டிவிட்டுக் குழாய் 'மௌனம்' சாதித்து விடுகிறதல்லவா? கடவுளைக் காண்பது எவ்வளவு அபூர்வம்! யுகம் யுகமாகப் பக்தர்கள் முயன்றும் ஆகாத காரியமல்லவா அது? தண்ணீரைக் கடவுளுடன் ஒப்பிட்டுவிட்ட பிறகு அது கண்ணில் படாமல் மறைவதில் விந்தை இல்லை! குழாயைத் திறந்தவுடன் கடவுள் உங்களுக்குத் தரிசனம் தரவேண்டுமென்று எதிர்பார்ப்பது எவ்வளவு மடமை!

சேலத்தில் காவேரியைக் கண்டதுபோல் சென்னையில் கிருஷ்ணாநதியைக் காணத் துடிக்கிறார் கார்ப்பரேஷன் கமிஷனர்! பைத்தியக்கார மனிதர்! 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' தெரியாதவராயிருக்கிறார். சென்னை நகரத் தண்ணீர்க் கஷ்டத்தை நிரந்தரமாகத் தீர்த்துவிடத் திட்டம் போடுகிறார்! விஷயம் தெரியாத அப்பாவி! குழாய்களில் எந்நேரமும் தண்ணீர் வந்தால், அந்தத் தண்ணீருக்குத்தான் என்ன பெருமை! குழாய்க்குத்தான் என்ன பெருமை! கார்ப்பரேஷன் கமிஷனருக்கும் கவுன்சிலர்களுக்கும் அப்புறம் என்ன தான் வேலையிருக்கிறது? 'கஷ்டப்படும்போதுதான் மக்கள் கடவுளிடம் முறையிடுகிறார்கள்' இந்தப் பொன்னுரையை அவர் மறந்துவிட்டாரா? மக்களே, கஷ்டப்படுங்கள்!

## பரிசும் பாராட்டும்

10–4–52 இதழ் தலைப்புப் போட்டியில் பின்வரும் தலைப்பு ரூ. 5 பரிசு பெறுகிறது.

**எரியும் உயிர்;**
**ஏந்தும் உடல்!**

பரிசு பெற்றவர்:
ஜே. ஹிருதயசாமி
கோத்தகிரி

### பாராட்டுக்குரிய தலைப்புகள்:

தலைப்பு:
**நன்மை பயக்கா**
**நாகரிக ஊதுவத்தி!**
பா. வேணுகோபால்
திருவல்லிக்கேணி

தலைப்பு:
**புகையும் நெருப்பல்ல;**
**நெளியும் சிந்தனை!**
கே. கந்தசாமி
விருதுநகர்

தலைப்பு:
**இருபதில் இனிக்கும் புகை**
**ஐம்பதில் அழிக்கும் பகை!**
முகிலன்
ஆண்டிக்கவுண்டனூர்

தலைப்பு:
**உதிராத சாம்பல்–ஓயாத சிந்தனை!**
மு. இராசாராம்
பெரிய காட்டுப்பாளையம்

தலைப்பு:
**மனசு சரியாவதும் புகையாலே**
**காசு கரியாவதும் புகையாலே!**
ஜி. சந்திரா
திருச்சிராப்பள்ளி

# காரணம் புரிந்தது

**பாலா**

**கோ**பாலன் அன்று தன் நண்பரைக் காண ரிக்ஷாவைத் தேடிக் கடைத்தெருவில் வந்து நின்றான். அவன் குறிப்பை அறிந்தவன் போல "சாமி, ரிக்ஷா வேணுமா?" என்று கேட்டவாறே ரிக்ஷாவைத் தாங்கிக்கொண்டு கோபாலன் முகத்தைப் பரிதாபத்துடன் நோக்கினான் அந்த ரிக்ஷாக்காரன். அவன் கோபாலனை ஒருதடவைக்கு இரண்டு தடவையாகப் பார்த்தான். பார்த்ததும் அவனுக்கு அமைதியின் அடையாளம் படர்ந்து, முகத்தில் மலர்ச்சியை உண்டுபண்ணியது.

"ஏம்பா, ரெய்னி ஆஸ்பத்திரிக்குப் போகவேண்டும். எவ்வளவு வாடகை கேட்கிறாய்?"

"வாடகைக்கு என்ன எசமான்? நீங்க முதலிலே ஏறி உட்காருங்க; அப்பாலே உங்க மனசுக்குத் தோணறதைக் கொடுங்க"

அவன் சரளமாகப் பேசிய தோரணை கோபாலனுக்கு நிரம்பவும் பிடித்திருந்தது; அதிசயமாகவும் இருந்தது. இப்படிப்பட்ட ரிக்ஷாவாலாக்களையா நாம் பட்டணத்தில் காண்கிறோம்!

அடுத்த விநாடி ரிக்ஷா புறப்பட்டது. அதாவது ரிக்ஷாவாலா புறப்பட்டான் உணர்வைக் கட்டி இழுத்துக்கொண்டு. ரிக்ஷா ஓடியது; அவன் ஓடினான். பல சந்துகள் இடைமறித்து விலகின. கொஞ்சநாழிகை சென்றிருக்கும். ஒரு சிறிய குடிசையின் முன் ரிக்ஷாவை நிறுத்திவிட்டுச் சின்னமுத்து நின்றான்.

"சாமி, கொஞ்சம் இறங்கி உள்ளே வாங்க"

எதிரே சென்றுகொண்டிருந்த டிராம் சப்தத்தில் அவன் வார்த்தைகள் மெல்ல ஒலித்தன; என்றாலும் அவை கோபாலனுக்கு நன்றாகப் புரிந்தன.

"எதற்காக?" என்ற கேள்விக்குறியை அவன் மனம் எழுப்பியது. இருந்தும், 'சடக்' கென்று அவனைப் பின்தொடர்ந்து உள்ளே நுழைந்த கோபாலன், கிழிந்த பாய் ஒன்றில் ஒரு குழந்தை படுத்திருப்பதைக் கண்டான்.

"ஐயா, என் மகளுக்கு நேத்திலேருந்து தாளாத சொரமுங்க. உங்களைக் கண்டதும் தெய்வத்தைப் பார்த்தது கணக்கா இருந்துச்சு. பெரியமனசு பண்ணி மகளைக் கொஞ்சம் கவனிச்சுப் பாருங்க. அது ஒண்ணுதான் எங்களுக்கு ஆறுதல்" என்றான் ரிக்ஷாக்காரன். அவன் கண்களில் ஆறுத்துயரம் வடித்த கண்ணீர் ஆறாக நிரம்பிவழிந்தது.

கோபாலனுக்குத் திக்கும் புரியவில்லை, திசையும் புரியவில்லை.

'தான் வைத்தியம் செய்வதா? ரிக்ஷாவாலாவுக்கு ஒரு வேளை புத்தி தடுமாறியிருக்குமோ? கீழ்ப்பாக்கம் செல்பவன் என்னையும் அங்கே கொண்டு சேர்த்து விடுவானோ?' என்று அவன் இதயம் 'ஆர்க்யூ' செய்தது; அவன் வக்கீல் அல்ல. என்றாலும் எண்ணங்கள் விவாதம் புரிந்தன.

"மச்சான், டாக்டர் எசமானைக் கையோடே கூட்டியாந்திட்டேன்" என்று சொல்லிய வண்ணம் உள்ளே நுழைந்தாள் ஒரு பெண். அவள் சின்னமுத்துவின் மனைவி.

"டாக்டர் ஐயா, நீங்களானும் கருணை காட்டுங்க. இந்த டாக்டருக்குத்தான் எங்க மேலே ஈவிரக்கம் உண்டாகல்லே" என்று சொல்லிய அவன், கோபாலன் பக்கமாகப் பார்வையைச் செலுத்திவிட்டான்.

வந்திருந்த டாக்டர் பசாங்குசத்திற்குக் கோபாலனை நன்றாகத் தெரியும். ஆனால் கோபாலனை டாக்டர் என்று ரிக்ஷாக்காரன் அறிமுகப்படுத்தியதுதான் அவருக்கு ஆச்சரியம் விளைவித்தது.

"ஏம்பா, கோபாலன் டாக்டரா? ஆச்சரியமாயிருக்கிறதே! விவசாயம் படித்தவனை வைத்தியத்திற்கு வேறு பழக்கிவிட உத்தேசமா?" என்றார் டாக்டர் ஒன்றும் புரியாதவராக.

"என்னுங்க எசமான், கலாட்டாப் பண்ணுறீங்க. அவரு பையிலே பாருங்க, காதிலே வச்சுப் பார்க்கிற சிவப்பு வாரு இருக்குது. அதைக் கண்டுதான் அவரு டாக்டருன்னு புரிஞ்சு, மகளையும் வழியோடே காட்டலாமின்னு இங்கே இறக்கினேனுங்க" என்று சின்னமுத்து விளக்கமாகச் சொன்னான்.

கோபாலன் ஒருமுறை குனிந்து தன்னைப் பார்த்துக் கொண்டான். அப்போதுதான் அவனுக்கு விஷயம் புரிய ஆரம்பித்தது. ரிக்ஷாக்காரன் சொல்வது 'ஸ்டெத்தஸ்கோப்'பைத்தான் என்பதறிந்தும், பசாங்குசத்திற்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை; மறுகணம் சின்னமுத்துவின் குழந்தையைப் பரிசோதிக்க உள்ளே சென்றார்.

அதேசமயம் "ஏய், சின்னமுத்து, நல்லவேளை நீ ஞாபகப்படுத்தினாய். கேட்கும் துட்டுத் தருகிறேன். தயவு செய்து முதலில் என்னை என் வீட்டில் கொண்டு சேர்த்துவிடு. அண்ணாவின் புஷ்கோட்டைப் புறப்பட்ட அவசரத்தில் போட்டுக்கொண்டு வந்துவிட்டேன். அண்ணாவுக்கு ஆஸ்பத்திரிக்குப் புறப்பட நேரமாய் விட்டது. ஜல்தி...ஓடு ...தங்கசாலை — ஷண்முகராயன் தெரு...36-ம் நம்பர் வீடு......" என்று பதட்டமும் பரிதாபமும் கவ்விய குரலில் கூறினான் கோபாலன்!

# கடவுள்

நாரா. நாச்சியப்பன்

இயற்கைவெளி யாய்நிற்கும் தனியாற்றல் ;
உலகனைத்தும் இயக்கு கின்ற
தனிக்கடவுள் எனவுரைத்துத் தம்வழக்கை
நிலைநிறுத்தும் சமயத் தோரே
மனித்தர்செயும் தவத்தாலும் சமயநெறி
வழக்காலும் நினைத்த வண்ணம்
தனித்தபெரும் இயற்கையது மாறிலதை
இயற்கையெனச் சாற்ற லுண்டோ ?

கண்ணெதிரே தோன்றாத கற்பகமாய்க்
கருதிடுவார் கருத்தி னுக்கும்
நண்ணுவதாய் இல்லாத நற்பொருளே
கடவுளெனில் நாடி யோடிப்
பண்ணுகின்ற பூசையிலும் பயனுண்டோ
அமர்ந்திருந்து, பார்வை யின்றி
எண்ணுகின்ற நினைப்பினிலும் எதிர்ப்படுமோ
பயன்படுதல் ஏது முண்டோ ?

எல்லாமுந் தானாகி இயங்குகின்ற
பெருவெளியாய் இருக்கும் ஒன்றே
நல்லாரின் கடவுளென நயமாகத்
தெரிந்தெடுத்து நவிலு வீரேல்
கல்லாகி மண்ணாகிக் காணுகின்ற
பொருளெல்லாம் கடவு ளென்று
சொல்லாமற் சொல்லுவதாம் ; சொற்பொருளைத்
தேடுவதில் பொருளு முண்டோ ?

வானாகி மண்ணாகி வளியாகித்
தீயாகி நீரு மாகித்
தானாக இயங்குகின்ற தனிப்பொருளே
கடவுளெனில் சமயத் தோரே
வானாய ஐந்தினையும் வயமாக்கி
நன்மையுற வகைசெய் யாமல்
வீணாகத் தொழுவதிலே பயனுண்டோ
அறிவுக்கும் வேலை யுண்டோ ?

அணுவுக்கும் அணுவாகி அண்டமெலாம்
தானுகி அவனி தன்னைக்
கணந்தோறும் இயக்குகின்ற கடவுள்படைப்
பனைத்துமெனக் கழறுகின்ற
கணந்தனிலே அவனடியில் காணிக்கை
கொடுப்பதுவும் கையை நீட்டி
வணங்கியிருந் தருளேந்தி வாங்கிவர
நிற்பதுவும் மடமை யன்றோ ?

எங்கணுமே தானுகி யிருப்பதொரு
பேரிடத்தை இடர்ப் படுத்தித்
தங்கவைத்துச் சிற்றறையில் தங்கவணி
பூட்டிவைத்துத் தாழு மிட்டுப்
பொங்கலிட்டுப் பூசைசெயும் போக்கிலந்தத்
தத்துவமும் போய் மறைந்து
தங்குவது மடமையெனத் தானறியா
திருப்பதுவும் தவறே யன்றோ ?

உடல்தழுவ இயலாது உள்ளமுந்தான்
பற்றுது சொல்ல வுந்தான்
முடியாது கடவுள்நிலை எனமுழங்கும்
சமயநூல் முந்திப் பின்னே,
மடமையிலே உழலுகின்ற மக்களுக்கிவ்
வுண்மையது வாய்க்கா தென்றும்
கடவுளடி தேடியிடர்ப் படுகவெனச்
சாற்றுவதும் கயமை யன்றோ ?

செயற்கெல்லாம் காரணனுய்ச் சித்தத்தில்
குடிகொண்ட சிவனே யென்று
தயக்கமின்றி மொழிகின்ற சமயநூல்
வல்லவரே, தன் பொறுப்பைச்
செயும்படிக்கே அவனைவிட்டுத் தத்தமது
கடமையெலாம் தவரு திங்கே
முயன்று முடித்திடுவீரேல் உலகுய்யும்
சிவன்செயற்கும் முட்டின் றுமே !

சாருமத மத்தனையும் தனிக்கடவுள்
நிலைதேடும் சாலை யென்றார்,
சீருடைய தெய்வமதோ பாழ்வெளியில்
நடனமிட்டுத் திரியு தென்றார்.
ஓருருவம் இல்லையென்றார் ஓசையில்லை,
ஒளியில்லை யிருளு மில்லை,
யாருமதைக் கண்டதில்லை, ஐயையோ
அத்தனையும் வீணே யன்றோ ?

பாழான தெய்வமெனப் பகருமொரு
சமயநூல், பார்த்தேன், அந்தோ,
பாழான தெய்வத்தைப் படையலிட்டுப்
பலபூசை பண்ணிப் பண்ணிப்
பாழாகும் மக்களினம் பார்த்திருந்தேன்
மனம் நொந்தேன், பாழுக்கங்கே
பாழான பாற்குடங்கள், காவடிகள்
அத்தனையும் பாழே பாழே !

கைமூடி யிருந்தொருவன் காட்டுகின்றேன்
காட்டுகின்றேன் என்று ரைத்தான்
மெய்மூடிப் பொய்காட்டும் வித்தையிலே
மிகத்தேர்ந்த அவனைச் சுற்றி
நைமூட மக்களெல்லாம் கூடிவிட்டார்
நம்பிநம்பிக் காத்தி ருந்தார்
கைமூடித் திறந்திட்டான் கண்டதெலாம்
வெறும் வெளியாய்க் கழிந்ததன்றே.

கோயிலிலே, குளங்களிலே, குருபூசை
மடங்களிலே ஆதீ னத்தின்
வாயிலிலே, தேவாரப் பாட்டினிலே
வேதநூல் வாய்ச் சாலத்தில்
போய்நுழைந்தார் அனைவருமே புகுந்துவெளி
வரும்போதே புகன்று விட்டார்
மாயவழி இவையனைத்தும் பாழ்வெளிதான்
கடவுளென மனதில் வைப்பீர் !



# மனோஞ்சிதம்

தங்கமணி

## 6. மனமிடிந்து வதங்கிய மனோரஞ்சிதம்

இதென்ன இது? எத்தனை அக்கிரமம்! என்ன அநியாயம்! அந்தப் பாவம், ரோகிக் கிழவன் அடிபட்டு அவதிப்பட்டுச் சாகவேதான் பிறந்தானோ?

மனோஞ்சிதத்திற்குத் தன் அன்புப் பரிசாகத் தங்கச் சங்கிலியைப் பரிசளிக்க வந்த அன்புக் கிழவனுக்கு அடி உதைப் பரிசுகள் அமோகமாகக் கிடைத்தன! தடியடிப் பரிசுகள் தாராளமாய்க் கிடைத்தன, சுதந்திரத்திற்குப் பாடுபட்ட காந்தியாருக்குமூன்று துப்பாக்கிக் குண்டுகள் பரிசாகக் கிடைத்தது போல!

கிழவன் 'குய்யோ, முறையோ' என்று கதறினான்! மனோஞ்சிதம் "அய்யோ, அப்பா!" என்று அலறினாள்! என்னதான் அலறிக் கதறியும் பலன்?—ஏழை கூடத்தான் "பசி! பசி!" என்று மரண ஓலமிடுகிறான்; சீமானுக்கு மனமிரங்குகிறதா?

கடைசியில், பாவம் கிழவனுக்கு இவைதான் கிடைத்தன.

திருடன் என்ற பட்டமும், அத்துடன்—சர்க்கார் விசாரணைக்குப் பிறகு ஐந்து வருடக் கடுங்காவல் தண்டனையுந்தான் கிடைத்தன அந்தக் கிழவனுக்கு, அன்புக் கிழவனுக்கு—சோகத்தால் தீண்டாதவனான கிழவனுக்கு — மனோஞ்சிதத்தின் உயிரைக் கொள்ளைகொண்ட ஆசைக் கிழவனுக்கு!

கிழவன் இரண்டாவது முறையாகச் சிறைபுகுந்தான்!

என்ன! இரண்டாவது முறையா? ஆம்; இரண்டாவது முறைதான்! முன்னொரு சமயங்கூட அதாவது, பத்து வருடங்களுக்கு முன்னே... இதெல்லாம் பிறகு சொல்கிறேன்... அப்புறம்.

மாதத்துடன் மாதங்கள் போட்டி போட்டுக்கொண்டு 'கிடு கிடு' வென்று புதைந்தொழிந்தன! பதினோராவது மாதம் கடைசி வாரத்தில் நான்காம் நாள். அன்று வெள்ளிக்கிழமை. இரவு ஏழு மணி.

அன்றுதான் மனோரஞ்சிதத்திற்குப் பிறந்தநாள்விழா! ஆனால் விழா நடக்கவில்லை! ஆட்டமும், பாட்டும், கேளிக்கையும், கூத்தும் விருந்தும், உபசரிப்பும், பாண்டு வாத்தியங்களும் அதுவும் இதுவும் பேரானந்தமாய் முழங்க வேண்டிய பங்களாவில் சுடுகாட்டு அமைதி நிலவிக்கிடந்தது! வாழை மரங்களாலும், மாவிலைத் தோரணங்களாலும், பல வண்ண விளக்குகளாலும் பேரழகாக அலங்கரிக்கப்பட்டுச் சித்திர மாளிகைபோல் சிங்காரமாய்க் காட்சியளிக்கவேண்டிய பங்களா "வெறிச்சோ' என்ற பாழடைந்து கிடந்தது! அங்குமிங்குமாக அலுப்புச் சலிப்பின்றி வேலை பார்க்கவேண்டிய வேலைக்காரர்கள் அத்தனைபேரும் மூலைக்கு மூலை முடங்கிக் கிடந்தார்கள்! வந்தவர்களையெல்லாம் வணக்கம் புரிந்து வரவேற்கவேண்டிய குமாரலிங்கமும், சாமந்தியம்மாளும் அழுத கண்ணும், சிந்திய மூக்குமாயிருந்தார்கள்! மினுமினுக்கும் பொன் வைரநகைகளும் பளபளக்கும் பட்டுடையும் உடுத்தி, பார்க்கப் பலே ரம்மியமாய் விளங்கவேண்டிய மனோரஞ்சிதம்—மேல் மாடியிலுள்ள ஒரு தனியறையில் பஞ்சுக் கட்டிலில் வதங்கிய மலர்போலச் சுருண்டு முடங்கிப் படுத்துக் கிடந்தாள்! காரணம்? அவளுக்குத் தீராத வியாதி! அய்யோ! குஷ்டரோகமா? இல்லை!

மனவியாதி!

அந்த அன்புக் கிழவனை அநியாயமாக அடித்து உதைத்துச் சிறைக்குள் தள்ளிய அந்த நாளிலிருந்து படுத்தவள்தான் — அன்றிலிருந்து மனோரஞ்சிதம் படுத்த படுக்கையாய்ப் போனாள்!

குமாரலிங்கமும், சாமந்தியம்மாளும் மறுபடியும் அந்த 'முருகனை' நினைந்து நினைந்து நெஞ்சம் உருக ஆரம்பித்தார்கள்! குமாரலிங்கத்தின் நெருங்கிய நண்பர்களின் வற்புறுத்தலின் பேரில் அடுத்த தெரு டாக்டர் ஒருவர் வந்து வந்து போனார். பலன்? துரும்பு பிடித்த இரும்புத் திருகும், கவலை பிடித்த களங்கமற்ற நெஞ்சமும் அவ்வளவு சுலபத்தில் கழலக்கூடியனவா? டாக்டரின் மருந்துகளும், குமாரலிங்கத்தின் பணமும் ஓரளவு கரைந்ததுதான் மிச்சம்! மனோரஞ்சிதத்தின் உடல்நிலை முன்னைவிடக் கேவலமாகிக்கொண்டுதான் வந்தது!

மணி ஒன்பதடித்தது!

"வெளியே யாரோ, கூப்பிடுகிறார்கள்!"—மனோரஞ்சிதத்தின் தலைமாட்டில் மனங்கலங்கிக் கவலையே உருவாய் உட்கார்ந்திருந்த குமாரலிங்கம், வேலைக்காரி பொன்னம்மாளின் சன்னக் குரலைக் கேட்டு மெல்லத் திரும்பிப் பார்த்தார். வாசலில் பொன்னம்மாள் நின்றுகொண்டிருந்தாள். குமாரலிங்கம் அவளை வெறித்து நோக்கினார். "மந்திரிப் பதவியைவிட்டுத் தொலைத்துவிட்ட பிறகும்கூட இந்தக் கள்ளமார்க்கெட் தடியர்கள் நம்மை விடமாட்டேன் என்கிறார்களே!" என்று கருவிக்கொண்டே "வர முடியாது, போ!" என்று கத்தினார்.

"யாரோ, சர்க்கார் உத்யோகஸ்தராம்..."—பொன்னம்மாள், தயங்கி, மயங்கி, வாக்கியத்தை இழுத்து விழுங்கினாள்.

சர்க்கார் உத்யோகஸ்தர் என்றதும் குமாரலிங்கம், மனோரஞ்சிதத்தை ஒருதடவை அன்புடன் பார்த்துவிட்டு, மெல்லக் கட்டிலை விட்டிறங்கினார். விறுவிறுவென்று வராந்தாவுக்கு வந்தார். பங்களா வாசலில் ஒரு ஹைதர்காலத்துத் தகரடப்பா சைக்கிளுடன் நின்றுகொண்டிருந்தான் ஒரு சிறைச் சேவகன்! குமாரலிங்கத்திற்குச் சிறைச்சேவகனைக் கண்டதும் சற்று பரபரப்பு உண்டாகியது.

"யார் நீ? எங்கிருந்து வருகிறாய்?"

"சென்ட்ரல் ஜெயிலிலிருந்து வருகிறேன். ஒருமணி நேரத்திற்கு முன்னே ஜெயிலில் ஒரு கைதி இறந்துபோனான்......"

"எந்தக் கழுதை செத்தால் எனக்கென்ன? விஷயம் என்ன?" குமாரலிங்கம் படபடத்தார்! அவர் உள்ளம் மனோரஞ்சிதத்தின்மீதே ஒட்டிக்கிடந்தது.

"இறந்துபோன அந்தக் கைதி உங்களுக்கு..."—வாக்கியத்தை இழுத்து வலித்து, முடிக்காமல் நிறுத்தினான் சேவகன். அவனுக்குக் குமாரலிங்கம்பிள்ளையைத் தெரியும், அவர் மந்திரியாயிருக்கும்போது மனிதனாயில்லை என்பதெல்லாம்! குமாரலிங்கம் மேலும் பரபரப்படைந்தார்.

"எந்தக் கைதி? என்ன சொன்னான்? என்ன விஷயம்?"—குமாரலிங்கம், சேவகனை நெருங்கினார். சேவகன் அவரிடம் ஒரு நீளமான உறையை நீட்டினான். அவன் நீட்டிய அந்தப் பழுப்புநிற நீளக் கடிதத்தைக் குமாரலிங்கம் வாங்கிக் கொண்டதும், சேவகன் சடாரென்று ஒரு 'சல்யூட்' அடித்தான். அதோடு அவன் வந்த வேலை முடிந்தது! அவன் அங்கிருந்து கம்பி நீட்டினான்!

குமாரலிங்கம் பறக்கப் பறக்க அவசர அவசரமாக உறையைக் கிழித்தார்; உள்ளிருந்த கடிதத்தை எடுத்தார்; பிரித்துக்கொண்டே மின்சார விளக்கின் அடியில்போய் நின்று 'பரபர'வென்று படிக்க ஆரம்பித்தார்...

அதென்ன கடிதம்? அந்தக் கடிதம்தான் இந்தக் கதையின் உயிர்! ஜீவநாடி!

(தொடரும்)

# இலங்கைச் செய்திகள்

“இலங்கையில்பாராளும் மன்றம் ஏப்ரல் 8-ந் தேதியுடன் கலைக்கப்படுகிறது. புதிய பாராளுமன்றத்துக்கு உறுப்பினரைத் தெரிவுசெய்யும் பொதுத் தேர்தல் ஏப்ரல் 28-ந் தேதிக்கும் மே 31-ந் தேதிக்கும் இடையில் நடைபெறவேண்டும். புதிய பாராளுமன்றம் ஜூன் 10-ந் தேதி காலை 10 மணிக்குக் கூட வேண்டும்” என்ற கவர்னர் ஜெனரல் சோல்பரிப் பிரபுவின் விசேஷ கெஜட் அறிக்கை பாராளுமன்ற அங்கத்தவர்களை மாத்திரமன்றிப் பொதுமக்களையும் திடுக்கிடச் செய்து விட்டது.

காலஞ்சென்ற பிரதமர் திரு. சேனநாயகாவைப் பற்றிய எண்ணம் மக்கள் மனத்தை விட்டு நீங்குமுன்னர்த் தேர்தலை நடத்தித் தமது கட்சிக்குச் செல்வாக்கைத் தேடிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடனேயே ஐக்கிய தேசியக் கட்சியினர் இந்தத் திடீர்ப் பொதுத் தேர்தலை நடத்த முன்வந்திருப்பதாகச் சில விஷயமறிந்த அரசியல் வட்டாரங்கள் பேசிக்கொள்கின்றன.

இலங்கையில் சர்வஜன வாக்குரிமை ஏற்பட்டு இருபத்தைந்து ஆண்டுகளாகின்றன. இந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கிடையில் எதிர்வரும் தேர்தல்தான் இந்தியருக்கு வாக்குரிமையில்லாமல் நடைபெறப்போகிறது. இலங்கையில் வாழும் 9 லட்சம் இந்தியர்களில் 8 லட்சத்துக்கதிகமானோர் தமிழர்கள். இவர்களது பிரதிநிதிகளாக இதுவரை பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த ஏழு இலங்கை இந்தியக் காங்கிரஸ் அங்கத்தவர்கள் இனிமேல் தேர்தலில் போட்டியிட்டு வெற்றிபெற முடியாத சூழ்நிலையில் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

கொழும்புத்திட்டப் பொருட்காட்சியை முன்னிட்டு ஆரம்பிக்கப்பட்ட சுவீப் அதிர்ஷ்டச் சீட்டுகள் கடந்த சனிக்கிழமை பொறுக்கியெடுக்கப்பட்டன. ox0918, cc 02958, AZ 02432 இலக்கச் சீட்டுகளுக்கு முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக 2லட்சப், 50ஆயிரம், 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுவதோடு அடுத்துப் பொறுக்கப்பட்ட 225 சீட்டுகளுக்குத் தலைக்கு 1000 ரூபாய் வீதம் பரிசு வழங்கப்படும். இந்தச் சீட்டு மூலம் எல்லாச் செலவுகளும் போக அரசாங்கத்துக்கு ஏறக்குறைய 13 லட்சம் ரூபாய் லாபமாகக் கிடைத்திருக்கிறது.

—தமிழ்ப்பித்தன்

# ஆடும் மாடும்

டி.கே.சீனிவாசன்



## பதினைந்தாவது அத்தியாயம்

“பேதை உள்ளமே! நீ ஏன் பித்துப்பிடித்ததுபோல அலையத் தொடங்குகிறாய்? காதல் உணர்ச்சிகள் கடமை என்ற கரையை உடைத்துக்கொண்டு கட்டுக்கடங்காமல் ஓடுகின்றனவோ? பாடுபட்டுப் பயிற்சியளித்துப் பண்படுத்தி அறிவின் ஆதிக்கத்தில் உன்னை நான் இயங்கச் செய்திருந்தும், நிலைமையில் ஏற்பட்டிருக்கும் சிறு மாறுதலால் நீர்நிலை குலைந்து விடலாமா? குடகு மலையில் தன் பயணத்தைத் தொடங்கும் போதே வழியில் தன்னைத் தடுத்து நிறுத்த இருக்கும் அணைக்கட்டுகளைப் பற்றிய நினைவு தோன்றுவதில்லை காவிரிக்கு. அந்த அணைக்கட்டுகளில் அடைபட்டும் விடுபட்டும் ஓடிவரும்போது முக்கொம்பில் தன்னில் ஒரு பகுதி கொள்ளிடமாகப் பிரிந்து விடும் என்பதுவும் தெரிவதில்லை அதற்கு; பிரிந்த கொள்ளிடம் கல்லணைக்கருகே தன்னோடு கைகுலுக்கும் என்பதையும் எதிர்பார்ப்பதில்லை அந்த ஆறு. இறுதியில் தன் பெயரிழந்து, வாழ்விழந்து, பண்புமிழந்து எல்லையற்ற நீர்த்திரளுள் தன்னையே இழந்து விட நேரிடும் என்பதையும் தெரிந்து வைத்துக் கொள்வதில்லை அது. இவைகளைப்பற்றியெல்லாம் கவலைப்படாமல் தன் கடமையைச்செய்து முடிப்பதிலேயே கண்ணுங் கருத்துமாக இருக்கிறது. தொல்லையே உருவான தொடர்ச்சிதான் தனக்கிருக்கிறது என்ற எண்ணத்தால் தொடங்கும்போதே அந்த ஆறு துவண்டிருந்தால்......? விளைவு எவ்வளவு விபரீதமாக இருந்திருக்கும்! இதை உணர்ந்தாவது நீ திருந்தி உன் கடமையுணர்ச்சியிலிருந்து வழுவாமல் இருக்கக் கூடாதா?”

சலனப்பட்டுக்கொண்டிருந்த தன் மனதுக்கு இந்தச் சமாதானத்தைச் சொல்லி அதைச் சாந்தப்படுத்த முயன்றாள் பத்மா. ஆனால் அது என்னவோ இந்த அறிவுரைகளுக்கெல்லாம் கட்டுப்படாமல் அலைமோதிக் கொண்டிருந்தது. அறிவின் ஆதிக்கத்தில் அதுவரையில் அடங்கியிருந்த அவளுடைய உணர்ச்சிகள் எதிர்பாராத முறையில் கிளர்ச்சி செய்யத் தொடங்கின. ஒருமுறை தூண்டிலில் சிக்கி அனுபவப்பட்டும், புழுவைப் பார்த்ததும் ஏன் தன் உள்ளம் அதைநோக்கி ஓடுகிறது என்பது புரியாமல் தத்தளித்தாள் அவள். தனக்கு நேர்ந்த அவதியை அது இன்னும் மறக்கத்தான் இல்லை—ஆனால்...அனுபவிக்காமல் துண்டிக்கப்பட்ட அந்தச்சுகம்...! பூசப்பட்டிருந்த பாதரசம் முழுதும் போக்கப்படாததால் ஒளிக்கதிர் மேலே பட்டதும் அதை பிரதிபலிக்கத் தவறவில்லை அவளுடைய உள்ளம் என்ற அந்தக் கண்ணாடி. காலில் பூட்டப்படும் விலங்கை, கழுத்தில் போட்டுக்கொள்ளும் சங்கிலி என்று மயங்கித் தடுமாறும் அவளுடைய மனம்... போராடுவதா? அல்லது புறக்கணிப்பதா? எதையும் நிர்ணயிக்க முடியாமல் அவையிரண்டையும் எல்லைக் கோடுகளாக்கி அவற்றிடையே தன் எண்ணங்களை ஊசலாட விட்டாள்.

"டீச்சர்! டீச்சர்!" என்று வெளியிலிருந்து குரல் கொடுத்த பள்ளிச் சிறுமி உள்ளேயிருந்து அரவமேதும் கேட்காததால் வீட்டுக்குள்ளேயே நுழைந்தாள். படுத்துறங்கும் சோமுவைப் பார்த்ததும் தயங்கிப் பாதி வழியிலேயே நின்றுவிட்டாள். ஆடாது அசையாது அமர்ந்திருந்த பத்மா தன்பக்கம் திரும்பமாட்டாளா என்று வெகுநேரம் எதிர்பார்த்தாள். ஏமாற்றந்தான் ஏற்பட்டது. உரத்துக் கூப்பிடவும் முடியாமல் அவளுக்கு என்னவோ போலிருந்தது. அறிமுகம் ஆகாத அந்தப் புது உருவத்தால் சூழ்நிலையே மாறிவிட்டது போலத்தான் இருந்திருக்கவேண்டும் அவளுக்கு. பொம்மையாகி உட்கார்ந்திருந்த தன் ஆசிரியையைப் பூனைபோல நடந்து நெருங்கினாள். குரலைக் காற்றளவாகக் குறுக்கிக் கொண்டு, "டீச்சர்" என்று மெல்ல அழைத்தாள்.

நிமிர்ந்து பார்த்தாள் பத்மா. "யார் இந்தப் புதிய மனிதன்?" என்ற வினாவை ஏந்தி நின்ற அந்தச் சிறுமியின் விழிகளைப் பார்த்ததும் அவளுக்கு வெட்கமாக இருந்தது. உணர்ச்சிகளின் போராட்டத்துக்கு உடனே முற்றுப்புள்ளி வைத்துவிட்டுச் சுற்றிலும் பார்த்தாள். சிறிது நேரம் ஒதுங்கி நிற்பதற்குள் உலகம் அவளைவிட்டு வெகுதூரம் ஓடிவிட்டது போன்ற உணர்வேற்பட்டது அவளுக்கு.

குழந்தையாக இருக்கும்போது கொஞ்சிவிளையாடும் கதிரவனின் கதிர்கள், அவள் பருவமடைந்திருந்ததால் உடலுக்கு

இதமளிக்கும் இளஞ்சூட்டை வெளிப்படுத்தின. அணைக்கப் படாமலே அந்த நேரத்திலும் எரிந்து கொண்டிருந்த மின்சார விளக்கு, வாழ்வில் அலுத்துக் களைத்தவனின் விழி ஒளிபோலக் காணப்பட்டது. காலில் சக்கர மிருந்ததால்—அதுவும் சுழன்று கொண்டிருந்ததால் — கடிகாரத் தின் முட்கள் காலையிலிருந்து மூன்று தடவைகள் சுற்றி முடித்துவிட்டு நான்காவது முறையாகவும் வலம் வரத் தொடங்கியிருந்தன. காலாவதி யான தேதித்தாளைப் பார்த்த போது, பூத்துக்குலுங்கும் புது மைக்கு முன் மதிப்பிழந்துவிடும் பழமையின் நினைவுதான் ஏற் பட்டது பத்மாவுக்கு.

"இன்னும் சாப்பிடவே இல்லையா, டீச்சர்?" என்று மேஜைமேல் இருந்த தோசைத் தட்டைப் பார்த்துக்கொண்டே கேட்டாள் அந்தச் சிறுமி.

"இல்லை, பல் துலக்கக்கூட இல்லை" என்று பதிலளித்தாள் பத்மா.

ஆச்சரியத்தோடு தன் ஆசிரி யையே பார்த்தாள் அந்த மாணவி. அவளுக்கு என்ன ஏற் பட்டுவிட்டது என்பதை விளங் கிக்கொள்ள முயற்சி செய்து முடியாமல் போனதால், ஏதோ ஒரு கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்ற அளவில் திருப்தியடைந் தாள். அந்த இளம் உள்ளம் தன் ஆசிரியைக்காக அளவுக்கு மீறி அனுதாபப்பட்டது.

"உடம்புக்குச் சுகமில்லையா, டீச்சர்?" என்று தன் குரலில் சோகத்தைச் சேர்த்துக் குழைத்து வெளிப்படுத்தினாள்.

அப்போதுதான் தான் பைத் தியக்காரத்தனமாக நடந்து கொண்டதை உணர்ந்தாள் பத்மா. உலகத்தை உணரத் தவிக் கும் குழந்தை உள்ளத்தைச் சந்தேகங்களுக்கிடையே சஞ் சரிக்கவிடுவது எவ்வளவு ஆபத் தானது என்பதை அவள் அறி வாள். தட்டிலிருந்த தோசையை யும் தன்னையும் தடுமாற்றத்தோடு மாறிமாறிப் பார்க்கும் அந்தச் சிறுமியின் மனதிலே...

"இதெல்லாம் நேற்றிரவே தயாரித்தது, லலி. இவர் சாப் பிடாமலே தூங்கிவிட்டார்; அத னால்தான் மிஞ்சிவிட்டது. காலை யில் நான் இன்னும் அடுப்புப்


**அருமையான கதைப் புத்தகங்கள்!**

| | |
|---|---|
| நரிக்குறவன் | 0—4—0 |
| மலைத்திருடன் | 0—3—0 |
| காசிராஜா | 0—3—0 |
| மாஸ்டர் கோபாலன் | 0—3—0 |
| காளிகோயில் | 0—3—0 |
| சரவணச்சாமி | 0—3—0 |
| சதிகாரன் | 0—3—0 |
| வனராணி | 0—3—0 |

நிபந்தனைகள்: விற்பனை ஏஜண்டு கட்கு 25% கமிஷன் தரப்படும். ரூ. 5-க்கு மேற்பட்ட ஆர்டர்களுக்குத் தபாற்செலவு இலவசம். வி. பி. மூலம் அனுப்பப்படும். தனிப்பிரதி, மாதிரிப் பிரதிகள் வேண்டு வோர் புத்தக விலையுடன் தபாற்செலவும் சேர்த்து தபால் ஸ்டாம்பாகவோ, M. O. மூலமாகவோ அனுப்பிவைக்க வேண்டும்.

★

விபரங்கட்கு:

**செந்தமிழ்ப் பதிப்பகம்**

த. பெ. எண்: 39 கீழராஜ வீதி

**புதுக்கோட்டை**

பற்றவைக்கக்கூட இல்லை" என்ற விளக்கத்தை அளித்தாள் பத்மா.

"அப்படியானால் நீங்கள் ஸ்கூலுக்கு வரப்போவதில்லையா, டீச்சர்?" என்று கேட்டபோது அந்தச் சிறுமிக்கு ஏக்கந்தான் ஏற்பட்டது. முதல்நாள் மாலை தன் ஆசிரியையை விட்டுப் பிரிந்ததிலிருந்து அப்போது சந்தித்தது வரை அவள் மனதில் பதிந்த அத்தனை நிகழ்ச்சிகளையும் சொல்லித் தீர்த்துவிடவேண்டும் என்று துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தது அவளுடைய இளம் உள்ளம். வீட்டுக்குள் பேசமுடியாமல் யாரோ ஒரு வேற்றாள் தடையாக இருந்தான்; வெளியில் கிளம்பிப்போகும் போது பேசலாமென்றாலோ... பாதியாக உடைத்துத் தன் தோழியோடு பங்கிட்டுக்கொள்ளலாம் என்ற எண்ணத்தால் மிட்டாயை வைத்துவிட்டுக் கல்லைத் தேடிப்போன சமயத்தில் இவள் தோழி முழுமிட்டாயையும் தின்றுவிட்டால் எப்படியிருக்குமோ அதைவிட அதிகமாக வேதனைப்பட்டது அவள் மனம்.

"நான் வரப்போவதில்லை, லலி. 'லீவு' எழுதித்தருகிறேன். கொண்டுபோய்க் கொடுத்து விடுகிறாயா?" என்று சொல்லிக் கொண்டே கடிதம் எழுதத் தொடங்கினாள்.

என்ன காரணங்காட்டி ஓய்வு கேட்பது என்பது புரியாமல் சிறிது நேரம் திகைத்தாள். கை என்னவோ தலைவலி என்று தானே எழுதி அவளுக்கேற்பட்ட அந்தச் சிக்கலைத் தீர்த்து வைத்தது.

அந்தச் சிறுமி போன பிறகு சோமு விழித்துக்கொண்டானா என்பதைக் கவனிக்க அவன் அருகே வந்தாள். தலைவலி என்று அவள் ஓய்வுக்கெழுதிய காரணம் அவள் கவனத்துக்கு வந்தது. அன்று மட்டுந்தானா அல்லது வாழ்நாள் முழுதுமா என்று நினைத்தபோது ஆழ்ந்த பெருமூச்சொன்று அவளிடம் எழுந்து பிரிந்தது.

அதற்குமேல் என்னசெய்வது என்பது புரியவில்லை அவளுக்கு. ஓயாமல் எதிலாவது ஈடுபட்டிருந்தால்தான் உள்ளத்தின் தொல்லையிலிருந்து விடுபடலாம் என்ற எண்ணத்தால்தொடர்ந்து எதையாவது செய்துகொண்டிருக்கத் துடித்தாள். அந்த அறை முழுதும் பார்வையைச் செலுத்தினாள். முதல்நாளிரவு சோமு படித்துவிட்டுக் கீழே எறிந்த கடிதம் அவள் கண்களில்பட்டது; எடுத்துப் பார்த்தாள். தான் சமையலறையில் இருந்தபோது சோமு அந்த அறை முழுதுமே ஆராய்ந்திருப்பானோ என்ற சந்தேகந் தோன்றியது அவளுக்கு. இவனுக்காகவா தன் உள்ளம் இவ்வளவு பாடுபடுகிறது என்ற எண்ணத்தால் துவண்டுபோனாள் உடனே.

அவளுடைய மனம் என்னவோ தன் முடிவை மாற்றிக் கொள்ளத் தயாராகவே இல்லை. அதட்டி அடக்கினால் ஒருவேளை அது அடங்காப்பிடாரியாகிக்




"என்னைத் தெரியவில்லையா? உங்களுக்கு ஞாபகமறதி அதிகம் போங்கள்"

சண்டித்தனம் செய்யத் தொடங்குமோ என்ற பயத்தால் அதன் போக்கிலேயே விட்டுவைத்தாள். முதல்நாளிரவு அவன் பேச்சும் நடத்தையும்... என்ன நடந்திருக்கும் அவன் வாழ்வில் என்பதை அனுமானிக்க அவளால் முடியவில்லை; ஆனால் எப்படியெப்படியெல்லாம் ஏற்பட்டிருக்கும் என்பதைமட்டும் உருவகப்படுத்திப் பார்த்தாள். முத்தை எடுக்கக் கடலுக்குள் மூழ்கியிருக்கிறான்; உள்ளேயிருந்த திமிங்கிலம் அவனைத் தொடர்ந்திருக்கிறது. அதனால்தான் அந்தப் பயமும் பதட்டமும்... எப்படியாவது நடந்த நிகழ்ச்சிகளைத் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது பத்மாவுக்கு. ஆனால் அதன் மூலமாகவே அவன் அவள் வாழ்வில் நிலைத்துவிட்டால்......

"எண்ணுவதெல்லாம் நடந்தால் ஈசன் ஒன்றேது?"

எவனோ ஒரு பிச்சைக்காரன் இந்தப் பாட்டைப் பாடிக்கொண்டே வீதியில் சென்றான். அந்தப் பாட்டின் அடிகள் பத்மாவின் காதுகளில் விழுந்தபோது அவளையறியாமல் சிரித்துவிட்டாள். ஈசன் ஒருவன் இருக்க வேண்டும் என்பதற்காக எண்ணுவதெல்லாம் நடக்கக்கூடாது என்று நம்பும் மனிதர்களைப் பார்த்து அனுதாபப்பட்டாள். ஆனால் அவளுடைய எதிர்காலமே அவளமைத்த எல்லைக் கோடுகளிலிருந்து நழுவுவதைப் பற்றி நினைத்தபோது...ஒரு வேளை அந்தப் பிச்சைக்காரன் பாடிய பாட்டில் உண்மை ஏதாவது ஒளிந்திருக்குமா? சீ!... இதென்ன பைத்தியக்காரத்தனம்!

தன் கையில் இருந்த அந்தக் கடிதத்தைப் பல தடவைகள் படித்துப் பார்த்தாள். ஏற்கனவே அவளுக்கிருந்த போதையை அதிகப்படுத்தும் விதமாகவே அந்தக் கடிதத்தில் இருந்த ஒவ்வொரு சொல்லும் அமைந்திருந்தன. சுக்கு நூறாக அந்தக் கடிதத்தைக் கிழித்தெறிந்தாள் பத்மா.

கடிதம் இருந்த புத்தகம் மேஜைமேலேயே கிடந்தது. எடுத்து அலமாரியில் வைக்கலாம் என்று எண்ணி அதைத் தன்கையில் எடுத்தாள். வைக்கப் போகும்போது ஒருவேளை அதிலேயே தன் கவனத்தைச்

செலுத்தினால் இன்னும் தன் சிந்தனைகளைச் சேகரித்துத் தொகுத்து விடலாமோ என்று நினைத்து அந்தப் புத்தகத்தைப் புரட்டினாள். அவள் புரட்டிய பக்கத்தில் காணப்பட்ட கருத்துக்கள்......

"எதிர்காலம்! கையில் இருக்கும் ரேகைகளும் காரிருளில் துடிக்கும் தாரகைகளுந்தான் இந்தச் சொல்லை விளக்கும் அரும்பத அகராதிகளாக இருந்து தொலைக்கின்றன! உலகில் உள்ள எல்லாவற்றையுமே எடைபோட்டு நிறுத்து நிர்ணயிக்கும் மனிதனால் ஏன் தன் எதிர்காலத்தைப் பற்றிமட்டும் நிதானிக்க முடிவதில்லை? விளக்கத்துக்குட்படாமல் இருப்பதுபோலத் தோன்றும் இந்தக் கேள்விக்குக் கிடைக்கும் விடை என்னவோ சாதாரணமானதுதான். ஒவ்வொரு பொருளின் சேர்க்கையும் முடிவுகாணும் விதம் ஒருவித ஒழுங்குக்குட்பட்டு இயங்குகிறது. ஆனால்...மனிதவாழ்வு? எந்தவித ஒழுங்குக்கும்விதிக்கும் உட்படாத புதுப்புது மனிதர்கள்—நிகழ்ச்சிகள்—நினைவுகள் தினந்தினம் அதில் கலந்துகொண்டே இருக்கின்றன—மூலப்பொருள்களே முடிவுகாண முடியாமல் முரண்படும்போது கலப்பை எப்படி நிர்ணயித்து விளக்கமுடியும்? அதனால்தான் மனித வாழ்வுமட்டும் இன்னும் ஆராய்ச்சி சாலையிலேயே இருந்துகொண்டிருக்கிறது. ஒருவேளை ஒத்த கருத்தும் ஒருமித்த நோக்கும் கொண்ட ஒரே சமுதாயம் அமைக்கப்பட்டால்...... சேர்க்கைகளின் பண்புகள் திட்டவட்டமாகத் தெரிந்துவிடுமாதலால் அதன் விளைவையும் எளிதில் நிர்ணயித்துவிடலாம், அப்போதுதான் தன் எதிர்காலத்தை மறைத்திருக்கும் இருள் கரைந்திருக்கக் காண்பான் மனிதன்."

அவ்வளவில் அவளுடைய அறிவு திருப்தியடைந்துவிட்டதால் அதற்குமேல் படிக்க அவளால் முடியவில்லை. புத்தகத்தை மூடிவைத்துவிட்டு மௌனமாக உட்கார்ந்திருந்தாள்.

"பத்மா! இன்னும் பள்ளிக்கூடம் போகவில்லையா?" என்று குரல் கொடுத்துக்கொண்டே வீட்டுக்குள் நுழைந்தாள் அவளோடு பணியாற்றிய ஆசிரியை ஒருத்தி. யாரோ புது மனிதர் படுத்திருந்ததைப் பார்த்ததும், "யாரோ ஊரிலிருந்து வந்திருக்கிறார்கள்போலிருக்கிறது" என்று சொல்லிமுடித்துஅதற்குமேல் உள்ள விவரங்களைப் பத்மாவிடமிருந்து எதிர்பார்த்தாள் அவள்.

"ஆமாம்" என்ற பதிலோடு முடித்துவிட்டு, அதற்குமேல் அந்தப் பேச்சுத் தொடராமல் பாதுகாத்துக்கொள்ளப்பேச்சை வேறுபக்கம் திருப்பினாள்.

"ஏது புடவை புதிதுபோல் இருக்கிறதே" என்று அவள் அணிந்திருந்த சேலையைப் பார்த்தாள்.

"அதுதான் நேற்றே சொல்லி விட்டேனே. யாரடி அவர்? உன் அண்ணனா?"என்று விடாப்

பிடியாகக் கேட்டாள் அந்த வம்புக்காரி.

"ஆமாம்" என்று சொல்லத் தான் நினைத்தாள் பத்மா. ஆனால் தலை என்னவோ 'இல்லை' என்பதற்கறிகுறியாக அசைந்துவிட்டது.

சிறிது நேரம் ஏதோ சிந்தித்துவிட்டு அந்தப் பொல்லாத ஆசிரியை பத்மாவை நெருங்கி வந்தாள். பிறகு இரகசியமாக, "ஆமாம் அம்மா பெண்ணாகப் பிறந்துவிட்டால் தன்னந்தனியாக எத்தனை நாளைக்குத் தான் இருக்கமுடியும்? குடியும் குடித்தனமுமாக ஆகவேண்டாமா?" என்றாள் குறும்பாக.

"போடி! எப்போதுமே உனக்கிந்தக் கேலிதான்!" என்று அலுத்துக்கொண்டாள் பத்மா.

ஆனால் அவள் போனபிறகு தன் உள்ளங் குளிர்ந்து காணப்படுவதுபோலத் தெரிந்தது அவளுக்கு. "தெள்ளும் தமிழில் இசைத்தேனைப்பிழிந்தெடுத்துத் தின்னும் தமிழ்மறவர்யாம் யாம் பகையே" என்ற கவியரசர் பாரதிதாசனுடைய பண்ணை மெல்லமுணுமுணுக்கத் தொடங்கியது அவள் வாய்.

காலை கரைந்தது—மத்தியானமும் மறைந்தது. அப்போதுதான் சோமு தெளிவுபெற்று எழுந்து உட்கார்ந்தான். அருகே உட்கார்ந்திருந்த பத்மாவைப் பார்த்ததும், அவனுக்கு முதல் நாளைய நிகழ்ச்சிகள் தொடர்பற்றுத் துண்டுபட்டு நினைவுக்கு வந்தன.



பெரியவர்: (பாடுகிறார்) உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும் அச்சமில்லை! அச்சமில்லை! அச்சமென்பதில்லையே!

---

"விடிந்து வெகுநேரம் ஆகிவிட்டதா பத்மா?" என்றான் சுற்றிலும் பார்த்துக்கொண்டே.

சிரிப்பதா, வேண்டாமா என்று சிந்தித்துக்கொண்டே, "ஆமாம் சோமு. இப்போது இருண்டுகொண்டு வருகிறது!" என்றாள் பத்மா கேலியாக.

பிறகு குறிப்பிடும்படியாக அவர்கள் ஏதும் பேசிக்கொள்ளவில்லை. இரவு உணவு முடிந்ததுந்தான் இருவரும் சாவதானமாக உட்கார்ந்து உரையாடத் தொடங்கினார்கள்.

"பத்மா! இந்த வீட்டில் நீ தன்னந்தனியாகத்தான் இருக்கிறாயா?"

"துணைக்கு யாரைப் போய்த் தேடுவது?"

"ஏன்?"

"பெண்ணாகப் பிறந்துவிட்டாலே அப்படித்தான் நடக்கிறது, சோமு. தனக்கென்று ஒரு ஆணைத் தேடிக்கொள்ளாவிட்டால் ஒழுங்கான முறையில் தன்னோடு அவள் ஒத்துவாழச் சமுதாயம் இடங்கொடுப்பதில்லை!"

அவளையே பார்த்தான் சோமு. அவனுக்கு அவள் பேச்சு வேடிக்கையாக இருந்தது.

"அப்படியானால் நீ இதுவரையில்......" என்று சொல்லித் தொடாமல்விட்டு, கோடிட்ட இடத்தில் பூர்த்தி செய்யும்படி விட்டுவைத்தான்.

"சந்தேகிக்கிறீர்களா, சோமு? நான் அறிவியக்கத்தைச் சேர்ந்த பெண் கூட அல்ல—அதைப் பற்றி முழுதும் உணர்ந்தவள்" என்று ஆவேசத்தோடு பேசி முடித்தாள் பத்மா.

"அப்படியென்றால்......"

அதற்குமேல் பத்மாவுக்குத் தன்னைக் கட்டுப்படுத்திவைக்க முடியவில்லை.

"சோமு! மனிதர்களை மிருகங்களாக்குவதல்ல அறிவியக்கம்—மிருகங்களை மனிதர்களாக ஆக்குவதுதான்! உங்களைப்போன்ற அரைகுறைகள் மேடைப் பேச்சைமட்டும் கேட்டுக் கூடிவிடுகிறீர்கள். சமுதாயத்தின் மனம் கல்லாக இருப்பதால் அதை உருக்கி இளகவைக்கப் பேச்சாளர்கள் கையாளும் உணர்ச்சியே உருவான சொற்கள் உங்களைக் கவர்ந்துவிடுகின்றன. அந்தச் சொற்களிலேயே சொக்கிப்போய் நீங்கள் வெறியாட்டம் போடுகிறீர்கள். எழுத்திலோ பேச்சிலோ இல்லை, சோமு, சுயமரியாதை இயக்கம்! அது எண்ணத்திலும் செயலிலும் இருக்கவேண்டியது. குப்பை கூளங்கள் எல்லாம் கோபுரமேறி விடுவதால் மாசில்லா மாணிக்கமான அந்த இயக்கம் மங்கிப்போகிறது."

பேச்சில் சலிக்காத தன்னையே பேச்சால் மடக்கும் அந்தப் பெண்ணுக்கு அதற்மேல் இடங்கொடுக்கச் சோமுவுக்கு மனம் வரவில்லை.

"அளவுக்கு மீறிப் பேசுகிறாய், பத்மா!" என்று அதட்டினான்.

"எது அளவு என்று இதுவரையில் எவரும் நிர்ணயித்ததாகத் தெரியவில்லையே, சோமு"

அந்த நேரத்தில் அவளை விட்டால் அடைக்கலந்தர வேறு எவருமில்லை என்ற எண்ணத்தால் வாயடைத்துப்போய் உட்கார்ந்திருந்தான் சோமு.

எப்படியாவது அவனை நல்வழிப்படுத்திவிட வேண்டும் என்ற முடிவால் அதற்கான திட்டங்களை வகுப்பதிலேயே முனைந்திருந்தாள் பத்மா.

இருள் என்னவோ வானத்தில் மண்டித்தான் கிடந்தது!

(தொடரும்)



# பொழுது போக்கு

ராதா

**திரைப்படச் செய்திகள்**

ஏ. வி. எம். ஸ்டுடியோவிலே செல்லப்பிள்ளை மிகச் செல்லமாக வளர்ந்து வருகின்றானாம், ப. நீலகண்டனின் டைரக்ஷனில். படத்தின் கதை, வசனத்தையும் நீலகண்டனே எழுதியிருக்கிறாராம். கே. ஆர். ராமசாமி, சகஸ்ரநாமம், கண்ணாம்பா, பண்டரிபாய் முதலியவர்களெல்லாம் இப்படத்திலே காட்சியளிப்பார்களாம்.

* * *

‘தாயார்’ என்ற பெயரில் முன்பு ஜெமினியில் ஒரு படம் தயாராகிக்கொண்டிருந்ததல்லவா? இப்போது அப்பெயரை மாற்றி மூன்று பிள்ளைகள் என்று பெயரிட்டு வெளியே அனுப்ப இருக்கிறாராம் ஜெமினிவாசன். மூன்று பிள்ளைகளாக எம். கே. ராதா, ஸ்ரீராம், கணேசன் ஆகியவர்களும், அவர்களின் மனைவிகளாக, சுந்தரிபாய், சூர்யபிரபா, வனஜா முதலியவர்களும் நடிக்கிறார்கள். அபூர்வ சகோதரர்களில் வில்லனாக நடித்த நாகேந்திரராவ் படத்தின் டைரக்டர். கண்ணாம்பாவும் நாகேந்திரராவும் மூன்று பிள்ளைகளின் தாய் தந்தையர்களாக வருகின்றார்கள். இந்த மூன்று பிள்ளைகளையாவது இரவல சரக்கைக்கொண்டு தயாரிக்காமல், தன் சொந்தக் கற்பனையைக்கொண்டு தயாரிக்கிறதா ஜெமினி என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

* * *

நியூடோன் ஸ்டுடியோவில், ஓம்—உமா பிக்சர்ஸ் கூட்டுத் தயாரிப்பான பணக்காரி மிகத் துரிதமாக உருவாகிக்கொண்டு வருகிறாளாம். டி. ஆர். ராஜகுமாரிதான் இதில் பணக்காரியாக நடித்து வருகின்றார். நாகையா அவரின் கணவராக நடித்து வருகின்றார். ரஷ்ய நாவலாசிரியர் லியோ டால்ஸ்டாயின் ‘அன்னாகரினா’ என்ற பிரபல நாவலைத் தழுவி எடுக்கப்படுகின்றாள் இப்பணக்காரி! வசனத்தின் பொறுப்பு இளங்கோவனிடமும் டைரக்ஷன் பொறுப்பு கே. எஸ். கோபால

கிருஷ்ணனிடமும் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன.

* * *

தம் சொந்தப் படமான "சின்னத்துரை"யைத் தாமே டைரக்ட் செய்தும், அதில் நடித்தும் வருகின்றார் மகாலிங்கம்! வடுவூராரின் இரு மனமோகினிகள் என்ற நாவலைத் தழுவியது இந்தச் சின்னத்துரை. இதில் எஸ். வரலக்ஷ்மியும் நடித்துவருகின்றார்.

* * *

சமீபத்தில் வெளியான குமாரி தமிழ்ப்படத்தைப் பற்றியும், அதன் முதலாளி ஆர். பத்மநாபனைப் பற்றியும் செய்திகள் அலைஅலையாக வந்துகொண்டிருக்கின்றன! பிரமாதமான படமாக இருக்கும் என்று எதிர்பார்த்த ரசிகர்களுக்கு மிகப் பிரமாத ஏமாற்றத்தைக் கொடுத்துவிட்டாளாம் இக்குமாரி!

* * *

தென்னாட்டில் இந்திப் படங்கள் தயாராகி வடநாட்டைப் படையெடுக்கத் தொடங்கியதும், நம் தென்னாட்டு நட்சத்திரங்களுக்கு இந்திப் படங்களில் நடிக்க நல்ல சந்தர்ப்பங்கள் கிடைத்துவருகின்றன. இப்போது ரஞ்சனுக்கு ஏகப்பட்ட கிராக்கி! வைஜயந்திமாலா, அஞ்சாம் என்ற படத்தில் நடித்துவிட்டு இரண்டாவது படத்திற்கும் ஒப்பந்தமாகியிருக்கின்றார். பானுமதியும் ஷம்ஷீர் என்ற படத்தில் நடித்துக்கொண்டிருக்கிறார். அடுத்தாற்போல் அஞ்சலிதேவி போகிறார் சுக்ரம்பா என்ற படத்தில் நடிக்க.

ஜூபிடர் பிக்சர்ஸார் தங்களது "ராணி"க்குச் செய்ய வேண்டிய சிங்காரங்களெல்லாம் செய்துவிட்டார்கள். இனி அவளைப் பகட்டான விளம்பரத்துடன் வெளியே அனுப்ப ஏற்பாடு செய்துகொண்டிருக்கிறார்கள். பானுமதி இதில் வெகு பிரமாதமாக நடித்திருக்கிறாராம் தனது விசிறிகளுக்குப் பிடிக்கும் வகையில். படத்தின் டைரக்டர் பிரசாத் என்னும்போது, படம் வெற்றிப்படமாகவே அமைந்துவிட்டிருக்கும் என்று நம்பலாமல்லவா?

* * *

பெர்லினிலே அகில உலக பிலிம் விழா நடக்கப்போகிறதென்று முன்பு கூறியிருந்தேனல்லவா? அவ்விழாவில் கலந்துகொள்ள டைரக்டர் சுப்ரமண்யத்திற்கு அழைப்பு வந்திருக்கிறது. சுப்ரமண்யத்தின் டைரக்ஷனில் உருவான 'தியாகபூமி' என்ற படம் தென்னிந்தியாவின் சார்பில் அக்கலைவிழாவில் திரையிடப்படுமாம். 'கல்கி'யால் எழுதப்பட்ட இக்கதை 1939-ல் தயாரிக்கப்பட்டு மிக வெற்றிகரமாக அந்நாளில் ஓடியிருக்கிறது, பேபி சரோஜா, எஸ். டி. சுப்புலக்ஷ்மி, பாபநாசம் சிவன் முதலியவர்கள் நடித்திருக்கிறார்கள். கொஞ்சகாலம் இப்படத்திற்கு வெள்ளை அரசாங்கத்தால் தடை விதிக்கப்பட்டிருந்தது வாசகர்களுக்கு ஞாபகமிருக்கலாம்.

# படிக்கலாமா?

குமணன்

"ஓரே வெட்டு! தலை தெறித்து விழுந்தது! ரத்தம் பீச்சியடித்தது! முண்டம் துடித்துப் பதைத்தது!..." எடுத்த எடுப்பிலேயே இப்படியாக 'ஹா!... ஹா!...' என்று கதையை ஆரம்பித்து, படிக்க ஆரம்பித்தவருக்கு ரசனை வெறியூட்டுவது ஒரு தினுசு.

"அவள் 'தொபீர்' என்று கிணற்றில் குதித்தாள்; அவளோடு அவனும் குதித்தான்; அவளின் சேலையைப் பிடித்து இழுத்தான்; சேலை கையோடு வந்துவிட்டது; அவள் கத்தினாள்; எனினும் அவன் விடவில்லை... அலங்கோலம்!..." இப்படியாகக் கதையை விரட்டு விரட்டு என்று விரட்டிக் கொண்டு ஓடுவது மற்றொரு தினுசு.

இந்த இரண்டாவது தினுசான அகத்துறைப் போதையோடு ஆரம்பிக்கப்பட்டு இன்றைய இலக்கிய உலகில் நடமாடித் திரியும் எத்தனை எத்தனையோ நாவல்களுள் 'நள்ளிரவு நங்கை' என்ற இந்நாவலும் ஒன்று. 'எல்லோரும் போனாப் போல நானும் போனே மாங்காத் தோப்பு......' என்ற முறையில் இந்நாவலாசிரியரான அன்பர் இளமைச்சித்தன் அவர்களும் இன்றைய 'காதல் ரசனையில்' எப்படியோ தன்னையும் பறி கொடுத்துவிட்டிருக்கிறார்.

உள்ளங்களுடன் உள்ளங்கள் ஒன்றோடொன்று முட்டி மோதிக் கொண்டு உணர்ச்சிப் புயலைக் கிளப்பும் நல்ல நாவல்தான் இது. ஆனால்......குடும்பத்து ஆண்—பெண்—இருபாலாருக்கும் 'ஆபாசம்! எச்சரிக்கை!' என்பது போல எடுத்த எடுப்பிலேயே ஆபாச எச்சரிக்கை பண்ணும் இந்நாவலின் 'நள்ளிரவு' என்ற முதல் அத்தியாயந்தான்... இந்த அத்தியாயத்தை—'அரைச் சேலை பெருந்தொடைக்கு மேலும் திரைந்துசுருண்டு வந்திருந்தது' இப்படிப்பல 'இதுகள்' கிடக்கும் இந்த அத்தியாயத்தை—அப்படியே கத்தரிக்கோல்பிரயோகம் செய்துவிட்டால்...? 'நள்ளிரவு நங்கை' நல்லதொரு குடும்ப நாவலாக மிளிரும் என்பதில் ஐயமில்லை!

நள்ளிரவுநங்கை. ஆசிரியர்: இளமைச்சித்தன், கன்னிகா பதிப்பகம், சென்னை-14. விலை 12 அணா.

வளரும் இலக்கியம்

சீதை!—அவளல்ல; இவளோர் ஏழைப் பெண்! அவளின் நைந்த வாழ்வில் அவள் படும் பாடு... அம்மம்மா! நினைக்க நினைக்க நெஞ்சந்தான் வலிக்கிறது. அவ்வளவு உருக்கமாக—ஓர் ஏழைக் குடும்பத்தில் இயங்கும் இயற்கைச் சம்பவங்களை இணைத்துப் பிணைத்து அரு

மையாக — 'வாழ்க்கையோ கவலையோ?' என்ற கற்பனைக் காவியமாக உருவாக்கியிருக்கிறார், ஆசிரியர் கோவைக்கிழார் அவர்கள். ஒரே சந்தத்தில் அமைந்த தெளிவான கவிதைதான்; ஆனால், கையாண்டுள்ள தமிழ் இன்னும் எளிமை கொண்டிருந்தால் எல்லோர்க்கும் புரியும்.

வாழ்க்கையோ கவலையோ? ஆசிரியர் : கோவைக்கிழார், கோவை நிலையப் பதிப்பகம், கோவை.

**நோ**டித்துக் கிடந்த பைந்தமிழ், மிடிமை தவிர்த்து மறுமலர்ச்சியுற்றுத் திகழ்ந்த இனிய வரலாற்றுள் ஓர் அரும் பகுதி 'மறைமலையடிகள்' என்ற இவ் அரிய நூல்; அதாவது, சைவ சன்மார்க்க ஒழுக்கத்துடன் தமிழ் வளர்த்த பெருமகனான அருந்தவத்தமிழ்ச் செல்வர் மறைமலையடிகளாரின் தமிழ் வாழ்வின் தெளிவான விளக்கம்.

ரசிகமணி டி. கே. சி. நாவலர் சோமசுந்தர பாரதியார், சி. என். முத்துரங்கம், எஸ். வையாபுரி அவர்கள் ஆக இன்னும் பல அறிஞர்க்கெல்லாம் அன்புறும் தமிழாசானாய் விளங்கிய தமிழ்க் கடல் மறைமலையடிகளாரின் விரிந்து தழைத்து எழுபத்தைந்து ஆண்டுகள் நீண்ட அரும் வாழ்வின் செந்தமிழ் மணத்தை முகர்ந்து ரசித்துத் தமிழ்மனம் பெற இந்நூல் சாலச் சிறந்தது.

மறைமலையடிகள். எழுதியவர் : புலவர் அரசு. சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை-1 விலை ரூ. 2-4-0.


சித்திரை முதல் நாளன்று மலர்ந்துவிட்டது!

சிதைந்த சமுதாயத்தைச் செப்பனிட, இருள் சூழ்ந்த வாழ்விற்கு ஒளி காட்ட, வாடும் இலக்கியப் பயிருக்கு வான மழையாய் இலக்கிய வானிலோர் துருவ நட்சத்திரமாய் மலர்ந்துவிட்டது!

# வாழ்க்கை

தித்திக்கும் நடையில் திகட்டாத கதைகளைத் தரும் தமிழ் மாத வெளியீடு

ஆசிரியர் : **சித்தார்த்தன்**

தமிழகத்தின் பிரபல பேனா மன்னர்கள் ஒவ்வொரு இதழிலும் தவறாது எழுதுகின்றனர்!

80 பக்கங்கள் விலை **8** அணா. வருட சந்தா ரூபாய் **6.**

விவரங்களுக்கு :

**"வாழ்க்கை"**

79, சுப்புராய செட்டி தெரு — திருப்பாதிரிப்புலியூர்

# செல்லாத ரூபாய்

வ. சம்பந்தன்

ஞாயிற்றுக்கிழமை. பகலெல்லாம் சுட்டெரித்துக்கொண்டிருந்த வெயில் சற்றுத் தணிந்து அப்பொழுதுதான் குளுமையான காற்று வீசிக்கொண்டிருந்தது. பகல் பதினொரு மணிக்கெல்லாம் பங்கஜா விலாஸ் நளபாகச் சாப்பாட்டை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் உள்ளே தள்ளிக்கொண்டு வந்து படுத்தவன் சரியாக நாலு மணிக்குத்தான் படுக்கையை விட்டு எழுந்தான். அப்படி ஒன்றும் அடித்துப் போட்டது போல் நீட்டிவிடுகிற வழக்கம் இல்லை அவனுக்கு. ஞாயிற்றுக்கிழமை ஓய்வுநாள். எங்காவது வெளியில் போகலாம் என்றால் வெயில் காயும் உக்கிரம் பயத்தை உண்டாக்கிற்று. அதுவுமல்லாமல் லட்சுமி வேறு ஊருக்குப் போயிருந்தாள்—பதினைந்து நாட்களுக்கு முன்னால் அவளுடைய அப்பா பட்டணத்துக்கு வியாபார விஷயமாக வந்திருந்தவர், அப்படியே பெண்ணிடம் என்ன சொன்னாரோ என்னவோ, வேதாளம் முருங்கைமரம் ஏறிக்கொண்டது குடும்பத்திலே.

"அப்பாவோடு ஊருக்குப் போய்க் கொஞ்சநாள் இருந்துவிட்டு வரலாம்னு இருக்கேன்" என்று ஆரம்பித்தாள் லட்சுமி. அருமையான நிலவு வெளியே காய்ந்துகொண்டிருந்தது. கையில் வெத்திலைப் பெட்டி. கூந்தலில் தழையத் தழையக் கதம்பம். அழகொழுகும் முகத்தில் அரும்பும் வியர்வை முத்துக்கள். கட்டின மனைவியை ஏறெடுத்துப் பார்த்தான் அவன்.

"ஊருக்குத்தானே — இப்ப என்ன ராணிக்குத் திடீர்னு ஊருக்கு?" லட்சுமியைய ராணி என்று செல்லமாகக் கூப்பிடுவான் நாகராஜன், அப்படித்தான் பழக்கம்.

"ஒண்ணுமில்லே. அப்பா கூப்பிடறார். அத்தோட விசாலத்துக்கும் இந்த வருடம் கல்யாணம் பண்ணிடணுமில்லே. நான் போய்ச் சுருக்கா வந்துவிடுகிறேன்" அவள் பேச்சிலே உரிமை தாண்டவமாடத்தான் செய்தது. மறுநாள் அப்பாவுடன் புறப்பட்டுவிட்டாள் லட்சுமி, சிதப்பாத்திற்கு!

மனைவியின் பிரிவு அவனை அவ்வளவாக வாட்டி வதைத்து எடுத்துவிடவில்லை. 'என்னவோ அவள் இருந்தால், அதன் போக்கே வேறுதான்' என்று நினைக்கத்தான் தோன்றும். ஆனால் அதற்காகக் கைபுரியாமல், கால்புரியாமல் பிடித்து வைத்த சிலைபோல் ஒன்றும் ஆகி

விடவில்லை அவன். ஒழுங்காகக் காரியாலயத்திற்குப் போய்க் கொண்டுதானிருந்தான். வேளா வேளைக்குச் சாப்பிட்டுக்கொண்டு தான் இருந்தான். பொழுது போகவில்லையென்றால் அங்கு மிங்கும் சுற்றிவிட்டு நேரம் சென்றுவந்து படுத்துக்கொள் வான்.

போனதும் ஒரு கடிதம் போட்டாள் லட்சுமி. அவன் அதற்குப் பதில் போட்டான். அதற்கப்புறம் அவளிடமிருந்து லெட்டர் வரவில்லை. அப்படியும் இப்படியும், ஓட்டியும் ஓட்டா மலும் பதினைந்து நாட்கள் ஓடின.

சாதாரண தினங்களில் அவ னுக்குக் கவலையே இல்லை. காரி யாலயம் போய்விடுகிறானல்லவா? ஆனால் இந்தப் பாழாய்ப் போன ஞாயிற்றுக்கிழமைதான் அவ னுக்குப் பெரிய வேதனையைக் கிளப்பிவிடுவதெல்லாம்! ஒரு வேலையும் இல்லாமல், வாழ்க்கை 'சொரத்தே' இல்லாமல் அவ னுக்கு வெறிச்சோடியிருக்கும். வீட்டிலோ சந்தடி கிடையாது. சிரிப்புக் கிடையாது. சண்டை கிடையாது. கலகலப்புக் கிடை யாது. வீட்டில் ஒரு பெண் பிள்ளை இல்லை என்றால்—வீடு மட்டும் என்ன-பரந்து கிடக்கும் உலகிலேயே பெண் என்கிற சொல்லே இல்லையென்றால்? அவ னால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை—"உதட்டில் தடவி யிருக்கும் சாயம் அழிந்து விடுமே என்பதற்காகத் தன் குழந்தையை முத்தமிடாத தாய் —கல்யாணம் வேண்டாமென்று சொல்லிக்கொண்டே சிருங்கார நாவல்களிலும் சினிமாக் காட்சி களிலும் ஈடுபட்டிருக்கும் கன் னிப்பெண்." நாகராஜனுக்கு இந்த வரிகளை எங்கேயோ படித்த ஞாபகம் வந்தது. இவை இரண்டும் எப்படிக் கேடுகெட்ட தன்மை பொருந்திய போலி அம்சங்களோ, அப்படித்தான் பெண் இல்லாத வீடும் உலக மும். நினைப்பு இப்படி ஓடியது. அவனும் கட்டைப் பிரம்மச்சாரி யாகக் களிப்புடன் வாழ்வதாக நினைத்துக்கொண்டு பட்டணத்து வாழ்க்கை—ஹோட்டல் சாப்பாடு அழகான உடை—வாரம் ஒரு சினிமா—என்று மூன்று வருடங் கள் பட்டணத்தில் ஒரு 'டேரா' போட்டுக்கொண்டிருந்தவன் தான். அதைவிடக் களிப்புத் தரும் வாழ்வே கிடையாது என்று உறுதியாக நினைத்தவன் தான். ஊரில் பெற்ற தாய் மக னுக்குக் கல்யாணம் என்ற பேச்சை எடுத்ததுமே அவள் மீது எரிந்து விழுந்தவன்தான். ஆனால் அதெல்லாம் சரியாகப் போய் ஒருமாதிரி பிரம்மச்சரிய வாழ்வுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு,வாழ்விலேமுதன் முதலில் மணப் பந்தலில் காதல் ஒருத்தியைக் கைப்பிடித்த பொழுது, அந்த மாந்தளிர்க் கரங்கள் அவனுக்கு ஆயிரமா யிரம் செய்திகளைச் சொல்லாமல் சொன்னபொழுது 'மண்ணில் தெரியுதடா வானம்' என்று உரக்கப் பாடிவிடலாமா என்ற

னிலே ஏற்படாமல் போகவில்லை அவனுக்கு.

அழகொழுகும் நினைவிலே, வாசல் தாழ்வாரம் ஓரமாக அவன் படுக்கையை விரித்து 'அப்பாடா' என்று ஆனந்தமாகச் சாயும்பொழுது, பக்கத்திலே ஒரு பெண்—அதுவும் பத்தரை மாற்றுத் தங்கம் போல அசைந்தாடி வந்து அருகில் அமரும்பொழுது, அவனுக்கு இல்லற வாழ்க்கையின் அடிப்படைத் தத்துவமே புரிந்துவிடும். ஆனால் அதுவெல்லாம் பதினைந்து நாட்களாகக் கிடையாது. குலுங்கக் குலுங்கச் சிரிக்கும் கோமளவல்லி போய்விட்டாள். உண்ணும் உணவுடன் பெண்மையின் பண்பும் சலந்து ஊட்டும் காதல் மனையாட்டியைப் பிரிந்து பதினைந்து நாட்களாகிவிட்டன. அவள் எங்கும் போய்விடவில்லை. இன்னும் சில தினங்களில் வந்துவிடவேண்டியவள்தான். இருந்தாலும் அவன் 'ஆண்மனம்' கேட்கவில்லை. பிரிவின் தாபத்தைத் 'தர்மா மீட்டர்' கொண்டு அளந்து வரையறுத்துவிட முடியுமா, என்ன? தனிமை அவனைத் தகித்து எரித்தது. 'வெளியில் எங்காவது போய்விட்டு வரலாம்' என்று எழுந்து முகத்தைக் கழுவிக்கொண்டு சட்டையை எடுத்து மாட்டினான். மணியைப் பார்த்தான். ஐந்தடிக்கப் பத்து நிமிடம் இருந்தது. விடுவிடுவென்று பஸ் ஸ்டாண்டை நோக்கி நடந்






‘‘தங்கத்தைக் கண்ணிலேயே காணோமே’’

‘‘என்ன அப்படிச் சொல்லுகிறாய்! பவுன் விலை இறங்கிப் போச்சாம். கடைவீதியிலே வாங்குவாரே இல்லையாம்’’

‘‘அந்தத் தங்கத்தை இல்லையடி, அம்மா உன் பெண் தங்கத்தைக் கேட்டேன்’’

தான். மௌண்ட்ரோட்டில் அவன் பஸ்ஸைவிட்டு இறங்கும்பொழுது மணி சரியாக ஐந்தே முக்கால். மௌண்ட்ரோட்டிற்கே உரித்தான ஒரு தனி ஜோடி நாகரிகம் பிளாட்பாரங்களிலே, கார்களிலே, பஸ்களிலே எங்கும் தாண்டவமாடிக்கொண்டிருந்தது. காப்பி சாப்பிடலாம் என்று பக்கத்திலிருந்த ஹோட்டலுக்குள் நுழைந்தான். ஒரு மேசையில் இடம் கிடைத்தது. அவனுக்கு எதிர்வாடையில் இளந்தம்பதிகள் ஜோடி ஒன்று சிரித்துக் குதூகலமாகச் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள். அவனுக்கு என்னவோ போலிருந்தது. விறுவிறு வென்று காப்பியைச் சாப்பிட்டுவிட்டு ஹோட்டலைவிட்டு வெளியே வந்தான். எதிரே சினிமாத் தியேட்டரில் ஏதோ தமிழ்ப்படம் நடந்துகொண்டிருந்தது. ‘சினிமாவுக்குப் போனாலென்ன? பொழுது போய்விடுமே ஒரு மாதிரியாக’ மனம் வேலைசெய்ய உடல் சினிமாக் கொட்டகைக்குள் நுழைந்தது.

சல்யாணமாகி லட்சுமி இல்லாமல் அவன் தனியாகச் சினிமாப் பார்த்ததில்லை. இருந்தாலும் இப்பொழுது எப்படியாவது பொழுதுபோனால் போதும் என்ற நிலை ஏற்பட்டுவிட்டதே!

அப்பொழுதுதான் படம் ஆரம்பிக்கிற தருணம். வெளிவிளக்கெல்லாம் அணைந்துவிட்டிருந்தார்கள். தியேட்டர் உள்ளே மத்தியில் அமைக்கப்பட்டிருந்த பெரிய விளக்கு மட்டும் எரிந்து கொண்டிருந்தது. தியேட்டர் வேலையாள் ‘டார்ச்லைட்’டைப் போட்டுப் பார்த்துக் காலியாகக் கிடந்த ஒரு நாற்காலியைக் காட்டினான் நாகராஜனுக்கு. வழியில் உட்கார்ந்திருப்பவர்களையெல்லாம் முண்டியடித்துக்கொண்டு போய் அந்த நாற்காலியில் உட்கார்ந்தான். அது ஒரு ஒதுப்புறமான இடம். பக்கத்துச் சீட்டில் ஒரு கிழவர் உட்கார்ந்திருந்தார். மற்றொரு பக்கத்து நாற்காலியில் ஒரு பெண்மணி உட்கார்ந்திருந்தாள்.

அவள்மட்டும் தானிருந்தாள். கூட யாரும் இல்லை. ஆகவே தான், இருப்பவர்கள் மரியாதைக்காக அவளுக்குப் பக்கத்தில் காலியாக இருந்த அந்த நாற்காலியில் உட்காரவில்லை என்று நினைத்தான் அவன். தனியாக அறிமுகமாகாத ஒரு பெண்ணருகில் அமர்ந்து இருள் சூழ்ந்த இடத்தில் மூன்றுமணி நேரம் சினிமாப் பார்க்கவேண்டுமென்பதை நினைக்கும்பொழுது அவனுக்கு என்னவோ போலிருந்தது. அங்குதான் உட்கார்ந்தாகவேண்டும். வேறு இடம் காலி இல்லை.

தியேட்டரில் இன்னும் பெரிய விளக்கு அணைக்கப்படவில்லை. மங்கலான ஒளி பரவிக்கிடந்தது. அவளை, அந்தப் பக்கத்து நாற்காலியைச் சற்று ஓரக்கண்ணால் பார்த்தான் அவன். மெல்லிய வாயில் புடவை...இறுக்கமான வெள்ளை 'ப்ளௌஸ்'......ஒரு கைக்குமட்டும் கறுப்புக் கண்ணாடி வளையல்கள்...காலிலே சிலிப்பர்...கூந்தலிலே தழையத் தழையக் கதம்பம்......பரவாயில்லை என்று சொல்லும்படியான தோற்றம். இன்றைக்கெல்லாம் இருந்தால் வயது இருபதுக்குமேல் போகாது. அவன் தன்னைப் பார்க்கிறான் என்பதை அவள் கவனித்துவிட்டாள் போலிருக்கிறது. அவளுடைய முகத்திலே மெல்லிய புன்முறுவல் தோன்றி மறைந்தது. அவனுக்குப் 'பக்' கென்றது. அந்தப் புன்முறுவலின் அர்த்தம் அவனுக்குப் பிடிபடவில்லை. கொஞ்சம் பயமாகக்கூட இருந்தது முதலில். 'ஏண்டா சினிமாவுக்கு வந்தோம்?' என்று சற்று கலக்கமான நிலைகூட உண்டாகியது....




டாக்டர்: (நோயாளிடம்) இந்த மருந்தை ஒருவேளை சாப்பிடு, போதும். அப்புறம் நீ என்னிடம் வரவேண்டிய அவசியமே இல்லை.

விளக்குகள் அணைந்து தியேட்டரில் இருள் சூழ்ந்தது. படம் ஆரம்பித்தது. ஆனால் அதிலே செல்லவில்லை அவனுடைய கவனம். வயசுப்பெண். அதுவும் 'ஒருமாதிரியான ஆள்'போலிருக்கிறது... அவளுடைய பக்கத்திலே ஒருவரோடு ஒருவர் தொட்டுக்கொள்ளும் நெருக்கமான நிலையிலே உட்கார்ந்து சினிமாப் பார்க்கிறோம் என்ற எண்ணம்தான் தலைதூக்கி நின்றது. அப்படி இப்படித் திரும்பாமல் திரையையே பார்த்

துச்கொண்டிருந்தான் அவன். தொடக்கத்திலேயே காதலர்கள் காரொன்றிலமர்ந்துகொண்டு ஒருவரோடொருவர் தொட்டு விளையாடிக்கொண்டு ஒரு காதல் பாட்டைப் பாடியவாறு குதூகலத்துடன் போகிற ஒரு கட்டம். பச்சுத்து நாற்காலிக்காரி என்ன எண்ணினாளோ 'உம்' என்று பெருமூச்சுவிட்டாள். அவனுக்குமட்டும்தான் அந்தப் பெருமூச்சின் ஒலி கேட்டிருக்கும். அவனுக்குத் திக்கென்றது. வயசுப்பெண் தன்னந்தனியாகச் சினிமாக் கொட்டகையில் வந்து அமர்ந்துகொண்டு, காதல் கட்டத்திலே பெருமூச்சுவிட்டால்?



"மேலே இருக்கிற மாமி கீழே இறங்கவே மாட்டாளே. எப்படி இன்று இங்கே வந்தாள் ?"

"தங்கமே விலை இறங்கிப் போச்சே! அவள் இறங்காமல் என்ன செய்யறது ?"

அவனுக்குப் படத்தையே ரசிக்க முடியவில்லை. இடைவேளை வந்தது. தியேட்டரில் இருந்த விளக்குகளெல்லாம் எரிந்தன. இசைத்தட்டு சங்கீதம் ஒலிக்க ஆரம்பித்தது. 'சோடா கலர்' என்ற சப்தம் வேறு சந்தடியை அதிகப்படுத்திகொண்டிருந்தது. கிரஷ்காரனைக் கூப்பிட்டாள் அவள். "எத்தனையம்மா... இரண்டுங்களா?" என்றுசர்வசகஜமாகக் கேட்டுக்கொண்டு ஒரு கிளாஸை அவளிடத்தில் கொடுத்துவிட்டு மற்றொன்றை நாகராஜனிடம் நீட்டினான் கிரஷ்காரப் பையன்! நாகராஜனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. வேண்டும் என்று சொல்லவும்முடியவில்லை. வேண்டாம் என்று சொல்லவும் முடியவில்லை. ஆனாலும் சற்று சமாளித்துக்கொண்டு "இல்லேப்பா அவர்களுக்கு மட்டும்தான்... எனக்கு வேண்டாம்..." என்று கூறினான். கிரஷ்காரப் பையன் லேசாகச் சிரித்துக்கொண்டு போனான். அந்தக் கிரஷ்காரப் பையனின் சிரிப்பு அவன் முன் என்ன என்னவோ எண்ணங்களையெல்லாம் கொண்டுவந்து வைத்தது. அவள் ஒன்றும் சொல்லவில்லை. அவளுக்கும் கிரஷ்காரப் பையனின் கேள்வி சற்று அதிர்ச்சியைக் கொடுத்திருக்க வேண்டும். முகத்தில் சற்று பைத்தியக்காரத்தனமான சாயல் தோன்றி மறைந்தது. சற்று நேரம்தான். சட்டென்று சமாளித்துக்கொண்டாள். லேசான புன்முறுவல் ஒன்றை நாகராஜன்மீது அள்ளிவீசி, பின்

ஞல் கிடந்த சடையை முன்னல் இழுத்துவிட்டுக்கொண்டே அத்துடன் விளையாட ஆரம் பித்துவிட்டாள் அவள். நாக ராஜனுக்கு மெல்லவும் முடிய வில்லை, விழுங்கவும் முடிய வில்லை. இடைவேளை முடிந்து தியேட்டருள் மறுபடியும் இருள் சூழ்ந்துகொண்டது. மறுபடியும் படம் ஓட ஆரம்பித் தது. அவனுக்குப் படத்தில் கவனமே செல்லவில்லை. அந்தக் கிராஷ்காரப் பையன் கேட்ட கேள்வி—அனுவசியமாக அவன் எடுத்துவீசின அந்தச்சொல்லம்பு அவனைச் சுற்றிச்சுற்றி வந்து தைத்தது. அந்தப் பையன் ஏன் 'இரண்டுங்களா?' என்று கேட்க வேண்டும்? அந்தக் கேள்வியி னூடே பொதிந்து கிடக்கும் பதிலை அவன் எண்ணிப் பார்த்த பொழுது அவனுக்கு வெட்க மாக இருந்தது. இருந்தாலும் இதயத்தில் எங்கேயோ ஒருமூலை யில் சற்றுக் களிப்பும் இருக்கத் தான் செய்தது. அவள் அதை ஒரு பொருட்டாக எடுத்துக் கொண்டதாகவே தெரியவில்லை. கிராஷ்காரப் பையன் எழுப்பின கேள்வி அவளுக்குச் சற்று தைரியத்தையும் அளித்தமாதிரி தான் தெரிந்தது. அந்த மாதிரி இருந்தால்தான் என்ன என்பது கூட இல்லை......அந்த நிலையை அவள் மனப்பூர்வமாக வரவேற் கிறாள் என்பதை அவள் முகம் தான் காட்டியதே!......

அவன் நாற்காலியின் ஓரமாக வைத்திருந்த வலது கரத்தின் மீது இன்னொரு கரம் வந்து லேசாகப் பொருந்திபது. வாழைத்தண்டுபோல் ஈரமாக இருந்தது அந்தக் கரத்தின் உணர்வு. அவன் திடுக்கிட்டான். பக்கத்திலே உட்கார்ந்திருந்த அவள் தன் கையை எடுத்து அவ னுடைய கையின்மீது போட் டிருந்தாள். தெரியாமல் ஞாபக மறதியாக அவளுடைய கையைப் போட்டாள் என்று சொல்ல முடியாது. வேண்டுமென்றே தான் அவள் போட்டிருக்க வேண்டும். கை இன்னொருவர் மீது பட்டுவிட்டதே என்பதறிந் தும் உடனே எடுக்காமலிருந்ததி லிருந்து அவளுடைய நோக்கம் தெளிவாகத் தெரிந்தது...இந்த நிலை அவர்கள் இரண்டு பேருக் கும் தவிர வேறு யாருக்கும் தெரிவதற்கில்லை. ஆனல் அவள் சும்மா இருக்கவில்லை. அவன் ஒன்றும் சொல்லாமல் இருக் கிறன் என்ற தைரியமோ என்னவோ லேசாக அந்தப் பெண்ணின் கரம் அவனுடைய கரத்தைத் தடவிக் கொடுக்க ஆரம்பித்தது. அவனுக்கு அவளுடைய செய்கை பிடித் ததோ இல்லையோ அவளுடைய தீண்டுதல் அவனுக்கு அந்த நேரத்தில் சற்று இதமாகத் தான் இருந்தது. அந்தச் சூழ் நிலை அவனுடைய மனிதத் தன்மையைச் சற்று மறக்கடிக் கத்தான் செய்தது. கடமை உணர்ச்சி, பண்பு சற்று மங்கி யது. வேறு ஒருபெண். சற்றும் அறிமுகமில்லாதவள்தான். இருந்தாலும் அந்தச் சமயத்தில் அவன் அதை நினைக்கவேயில்லை.




**பக்கத்திலிருக்கும் நண்பர்:** ஏது வரவரக் குழந்தையாகிறீரே நீர்! பாப்பா சாப்பிடும் டம்ளர்தான் உமக்கும் கிடைத்ததாக்கும்?

**வீட்டுக்காரர்:** தண்ணீர்க் கஷ்டம் வந்த பிறகு பெரிய டம்ளரையெல்லாம் ஒளித்துவிட்டாள் என் வீட்டுக்காரி!

இளம் மனையை ஊருக்கு அனுப்பிவிட்டு ஏங்கிக்கிடக்கும் வாலிபன் இருள் கவிழ்ந்து கிடக்கும் தியேட்டர்—வலிய வந்து விழும் இளம் பெண்-முன் வரிசையிலும் அங்குமிங்கும் சிதறிக்கிடக்கும் பட்டணத்திற்கே உரித்தான ஜோடி நாகரிகத்தின் உச்சாணி நிலை—காதல் கட்டங்கள் நிறைந்த படம்—எல்லாம் அவனைப் பைத்தியக்காரனாக அடித்துவிட்டன. ஒன்றுமே செய்யாமல் அந்தப் பெண்ணின் கையை எடுத்து அப்பால் போடாமல் அப்படியே சிலைபோல் கிடந்தான் சற்று நேரம். போதை சற்று ஏறியது. லேசாக அவளுடைய கரத்தை வருட ஆரம்பித்தான். அவள் நெருங்கினாள். தலைபோடு தலை முட்டுவதற்கில்லாமல் நாற்காலி தடுத்துக்கொண்டு இருந்தது. புன்னகை தவழும் முகத்தோடு அவனைக் கடித்துத் தின்றுவிடுவதுபோல் பார்த்தாள் அவள். போதை முறுக்கேற, சூழ்நிலை அவனைச் சுத்த சூன்யமாக்க, உடல்பசியின் வெறி அவனை உந்தித்தள்ளக் கிடந்தான். சற்றுநேரம் சிந்தனையை அடகு வைத்துவிட்டுச் சில்லறை இன்பத்திலேசிக்கிச் சீரழியும் அவன், நல்ல வலை கிடைத்துவிட்டது என்று நமுட்டுச் சிரிப்புச்சிரித்து நாசகாரப் பாதைக்கு அழைத்துச் செல்லத் தயாராக இருக்கும் நாரீமணி—தீயும் பந்தமும்பக்கத்துப்பக்கத்திலே திடுக்கிட்டு எழுந்தான் அவன். படீரென்று ஒரு உதை விழுந்தது அவன் இதயத்திலே. ரசமான கட்டம். விபசாரி ஒருத்தியின் வலையிலே சிக்குண்டு கதாநாயகன் கட்டின மனைவியைப் ‘போ வெளியே’ என்று காலால் உதைத்துத் தள்ளுகிறான். கண்ணீரும் கம்பலையுமாக, மார்போடு அணைத்த பச்சிளங்குழவியோடு பதறுகிறாள் அவள். சினிமாவில்தான். இருந்தாலும் அந்தக் காட்சி அவன் நெஞ்சில் போய்த் தைத்தது. கதாநாயகியை அவன் படத்திலே பார்க்கவில்லை. தன் மனைவி லட்சுமி நேரில் வந்து கதறுவது போல் இருந்தது அவனுக்கு.

கட்டின மனைவியின், லட்சுமியின் கள்ளங்கபடமற்ற வெள்ளை உள்ளம், பேசும் இருகருவிழிகள் பணிவும் பண்பும் பொருந்திய சிரிப்பு, பெண்மையின் மேன்மை பொருந்தி விளங்கும் அவள் வனப்பு, தன்னையே நம்பிச் சுற்றிக்கிடக்கும் அவள் வாழ்வு, அத்தனையும் அவன் நெஞ்சகத்திலே நடமாடின. லட்சுமியை மறந்து விட்டிருந்த அந்தச் சிறு நேரம் அந்தக்கேடு கெட்ட சூழ்நிலை, அத்தனையும் சுக்குநூறுகிற்று. அவன்போதை தெளிந்தது. தன்மீது அன்பையும் நம்பிக்கையையும் அள்ளிச் சொரிந்திருக்கும் கட்டின மனைவியை மறந்து, முன்பின் அறிமுகமில்லாத ஒருத்தியுடன் அவன் தியேட்டரில் சில்லறைக் கும்மாளம் அடிப்பதென்றால்! அவனல் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை. அந்தப் பயங்கரமான சூழ்நிலைக்குத்தான் இளகிக்கொண்டே வந்தது கண்டு அவனுக்கு வெட்கமாக இருந்தது. அவளுடைய கையை எடுத்து அப்புறமாகத் தள்ளி விட்டுப்பட்டென்று நாற்காலியை விட்டு எழுந்து விறுவிறுவென்று தியேட்டரைவிட்டு வெளியே நடந்தான். வெளியே பரவிக் கிடக்கும் சுத்தமான காற்று அவனுக்குக் குதூகலிப்பை ஊட்டியது. தன் முகத்தில் குப்பென்று வியர்த்துக் கிடந்த வியர்வைத் துளிகளைத் துடைத்துக்கொண்டே எதிரிலுள்ள பஸ்ஸ்டாண்டை நோக்கி நடந்தான்.

அன்று இரவு அவனுக்குத் தூக்கமே பிடிக்கவில்லை. லட்சுமியின் நினைப்பு அவனைச் சுட்டெரித்தது. அவளுக்கு அவன் புரியஇருந்த துரோகம் அவனை வாட்டிஎடுத்தது. "லட்சுமி இருந்தால்" இந்தக் கேள்வி அவன் இதயவட்டத்திலே சுற்றிச் சுற்றி ரீங்காரம் செய்தது. காலையில் சாப்பிட்டுவிட்டுக் காரியாலயத்திற்குப் போவதற்கு முன்னல், தபாலாபீசுக்குள் நுழைந்து லட்சுமிக்குக் கடிதம் எழுதக் கார்டு வாங்கப் பையிலிருந்த சில்லறையை எடுத்தான். தியேட்டரில் ரூபாயும் அணுவுமாக வாங்கிய சில்லறை அப்படியே கைநிறைய வந்தது. அந்தக் கும்பலில் ஒருசெல்லாத ரூபாய் பல்லை இளித்துக்கொண்டிருந்தது. அந்தச் செல்லாத ரூபாயைக் கண்டு, அப்பொழுது அவன் இருந்த நிலையில், நாகராஜனுக்குச் சிரிப்புத்தான் வந்தது. "உடனே புறப்பட்டு வா. உலகமே என்னை இங்கே ஏமாற்றப் பார்க்கிறது. செல்லாத ரூபாய் ஒன்று என்னிடம் வந்துவிட்டது. அதைவிட நானே நேற்று செல்லாத ரூபாயாகிவிட இருந்தேன். அந்தக் கதையெல்லாம் உனக்கு விபரமாகச் சொல்லவேண்டும், லட்சுமி உடனே புறப்பட்டு வா, ராணி!"

லட்சுமிக்கு அன்றையத் தபாலில் நாகராஜனிடமிருந்து அந்தக் கடிதம் பறந்தது!

# விளம்பரமும் திருத்தமும்

க. சண்முகசுந்தரம்

சிற்றுண்டிச் சாலைகளிலும் உணவு விடுதிகளிலும் எழுதி வைக்கப்பட்டிருக்கும் விளம்பரப் பலகைகள் சில சமயங்களில் சில விநோத நிகழ்ச்சிகளுக்கு அடிப்படைக் காரணமாக அமைந்துவிடுகின்றன.

சிற்றுண்டிச்சாலை ஒன்றில் ஓர்நாள் சில தமிழன்பர்கள் சிற்றுண்டி அருந்தச்சென்றனர். தமிழில் எழுதப்பட்டுள்ள விளம்பரப் பலகைகளில் எழுத்தும் பிழைகளோ, கருத்துப் பிழைகளோ இருந்தால் அவற்றைச் சுட்டிக்காட்டித் திருத்தச் செய்வது அவர்களுடைய முக்கிய பணிகளில் ஒன்று. அச்செயலுக்காகச் சிலர் அவர்களுக்கு அளித்த பட்டம் "தமிழ் அகராதிகள்." தமிழ் வளர்ச்சியொன்றே குறிக்கோளாகக் கொண்ட அந்த அன்பர்கள், கேலிப்பேச்சுக்களைச் சிறிதும் பொருட்படுத்துவதில்லை.

எதிரே யிருந்த பலகையில் "தயவுசெய்து இலையைத் தொட்டியில் போடவும்" என்ற வாக்கியங்களைக் கண்டனர். தோசை வைப்பதற்காகக் கொண்டுவந்து போடப்பட்ட புது இலைகளை அப்படியே எடுத்துத் தொட்டியில் போட்டுவிட்டனர். தோசையுடன்வந்த பரிசாரகர் இலைகளைக் காணாது விழித்தார். "ஏனப்பா விழிக்கிறாய்? அதோ அந்தப் பலகையில் எழுதியிருப்பதைப்பார். உங்கள் வேண்டுகோளை எழுத்துக்கு எழுத்து சரியாக நிறைவேற்றியிருக்கிறோம். இலையை தொட்டியில் போடுமாறு தயவாகக்கேட்கும் பொழுது சும்மா இருக்கலாமா?" என்று கேலி செய்தனர். இதைக் கவனித்துக்கொண்டிருந்த சிற்றுண்டிச்சாலையின் உரிமையாளர் மறுநாளே வேறு ஒரு பலகை எழுதச் செய்தார். "சாப்பிட்ட இலையைத் தொட்டியில் போடவும்" என்ற புதுப் பலகையை மறுநாள் கண்ட அதே தமிழன்பர் நேரே உரிமையாளரிடம் சென்றனர். "ஐயா! ஒரு சந்தேகம். சாப்பிட்ட இலையைத் தொட்டியில் போடச் சொல்கிறீர்கள்! இலையைத்தான் நாங்களே சாப்பிட்டுவிட்டதாகக் குறிப்பிட்டுவிட்டீர்களே, பின் எதைத் தொட்டியில் போடுவது?" என்று ரகளை பண்ணினர். உரிமையாளருக்கோ பெரிய தலைவேதனையாக இருந்தது. எவ்வாறு எழுதினால் குற்றங்கூற முடியாதபடி இருக்குமென யோசித்து யோசித்துப் பார்த்தார். ஒன்றும் புரியவில்லை. தமிழன்பர்களை விரோதித்துக் கொள்ளவும், அவர்களுடைய ஆதரவை இழக்கவும் விருப்பமில்லை. அவர் என்ன அதிகார பீடத்தில் அமர்ந்திருப்பவரா?

"நமஸ்தே நமஸ்காரம் அல்லது ஜெய்ஹிந்த்" என்று கூறாமல் "வணக்கம்" என்று தூய தமிழில் தனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்ட குற்றத்திற்காகத் தண்ணீரில்லாத காட்டுக்குத் தனது கீழ் உத்தியோகஸ்தரை மாறுதல் செய்ய! ஓர் ஏழைச் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்தானே? தனது வாடிக்கைக்காரர்களைத் திருப்திப்படுத்த வேண்டியது அவருடைய கடமையல்லவா!

மறுநாள் சிற்றுண்டி சாப்பிடச் சென்றிருந்த என்னிடம் விவரத்தைக் கூறி ஆலோசனை கேட்டார். "எச்சில் இலையைத் தொட்டியில் போடவும் என்று எழுதுங்கள். யாரும் குற்றம் கூறமுடியாது. ஏனென்றால் அந்த இலையில் ஏதாவது வைத்துச் சாப்பிட்ட பின்தான் எச்சலாகிறது" என்று யோசனை கூறினேன். அவ்வாறே எழுதச் செய்து, தமிழன்பர்களின் கேலிப் பேச்சிலிருந்து தப்பினார்.

எனது அனுபவத்தை இங்கே எதற்காகக் குறிப்பிடுகிறேனென்றால், இதுபோன்ற கேலிகளுக்கெல்லாம் இடம் கொடுக்காதவாறு, உங்கள் விளம்பரப் பலகைகளையெல்லாம் பிழையின்றி எழுதவேண்டுமென்பதற்காகத்தான். ஆங்கிலத்தில் எழுதப்படும் விளம்பரப் பலகைகளில் எழுத்துப் பிழைகளோ, கருத்துப் பிழைகளோ தென்படுகின்றனவா, சிந்தித்துப் பாருங்கள். தாய்மொழியாகிய தமிழில் மட்டும் ஏன் இந்த அலங்கோலங்களெல்லாம்!

"தணிப்பரிதாம் துன்பமிது
தமிழகத்தின் தமிழ்த் தெருவில்
தமிழ்தான் இல்லை"

என்ற பழிச் சொல்லை நீக்க ஒவ்வொரு துறையிலுள்ளோரும் முயலவேண்டாமா? "ஹோட்டல் கபே, ரெஸ்ட்டாரெண்ட், போர்டிங் அண்ட் லாட்ஜிங்" என்று அப்படியே தமிழில் எழுதாமல் நல்ல தமிழில் "சிற்றுண்டிச் சாலை, சிற்றுண்டி விடுதி, உணவு விடுதி, உண்டுறை விடுதி" என்று மாற்றச் செய்யுங்கள். தமிழ்ப் பற்றுள்ள அன்பர்கள், தொண்டர்கள், கழகங்கள், இதை உடனடியாகக் கவனித்து, ஆங்காங்கேயுள்ள விளம்பரப் பலகைகளைத் திருத்தி எழுதச் செய்யுங்கள். தமிழ்த் தாய்க்கு நாம் செய்யும் முதல் பணி இதுதான்.




"இவரைப்பற்றி எனக்கு அதிகம் தெரியாது. ஆனால் நான் கேட்கும்போதெல்லாம் புத்தகம் தாராளமாகத் தருகிறார்!"

"அவரைப்பற்றி எனக்கு ஒன்றுமட்டும் நிச்சயம் தெரியும். வாங்கின புத்தகத்தைத் திருப்பிக் கொடுக்கவேமாட்டார்!"

## எஸ். ஆறுமுகம்

யில் பார்த்தபோது உடல் பூராவும் ஏனே நடுங்கித் தீர்த்தது. அவளருகில் அவன் ஊமையாக, எதுவும் பேச முடியாமல் நின்ருன். அவன் இதயத்திலே ஒருவகை நடுக்கம்-காதுகளிலே ஒரு இனிய ரீங்காரம்—மனத்திலே ஒருவிதப் பயம் படர்ந்த இன்ப உணர்வு. ஏன் இத்தகைய மாற்றம்? இதுதான் காதலா?

அவன் இதை உணரமுடியவில்லை. ஆனல் அந்தப் பெண்ணைத் தன் துணைவியாக்கவேண்டுமென்று முடிவாகத் தீர்மானித்துக்கொண்டான்.

அவளுடைய பெற்ருேர்கள் அந்த இளைஞனைப் பற்றிப் பாவியிருந்த அவப்பெயரைக் கேட்டுச் சிறிது தயங்கினர்கள். ஏற்கனவே அவனுக்கு ஒரு மனைவி உண்டென்ற சேதி அவர்களுக்கு எட்டியிருந்தது. மேலும் அவன் கண்ட இடங்களில் கண்ட பெண்களையெல்லாம் காதலித்து வந்தவனம்!

ஆனல் அவன் வாழ்க்கையில் புது ஏடு புரண்டது. முன் னாளையத் தன் மனைவியை அவன் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை என்றும் எண்ணினன். அவன் தன் முதல் மனைவிக்கு ஜீவனும்சத்துக்கு ஏற்பாடு செய்தான். அத்துடன் அவள் தொடர்பு அறுந்தது. அவளைப் பார்க்கவும் அவன் கூசினன். அவள் யாரென்று தெரியாதவன் போல

மறுபடியும் திருமணம் செய்து கொள்ளக்கூடாது என்று நிலையான முடிவிலிருந்து ஜாக்ஸ் திடீரென்று சற்றும் எதிர்பாராத வகையில் ஒருநாள் தன் மனதை மாற்றிக்கொண்டான்.

ஒருநாள் காலை தண்ணீரினின்றும் வெளியேறிக்கொண்டிருக்கும் பெண்களைக் கவனித்தவாறு மணற்பரப்பில் அமர்ந்திருக்கையில், அழகிய, கவர்ச்சிமிக்கதொரு சிறு பாதம் அவன் பார்வைக்கு இலக்காகிற்று. குளிக்கும் உடையில் போர்த்திவிடப்பட்டிருந்த அந்த உருவத்தின் கணுக்காலையும் தலையையும் மாத்திரம்ம அவனல் முற்றும் காண முடிந்தது. அவன் அக்கணமே தன் வசமிழந்து போனன், கவர்ச்சிமிகுந்த இனிய அப்பெண்மீது. அவள் எளிமை பெற்று, நல்லவளாகத் தூய்மையுடன் தோன்றினள்—அவளுடைய கன்னங்களைப்போல, உதடுகளைப்போல!

அவள் குடும்பத்துக்கு அவன் அறிமுகப்படுத்தப்பட்டபோது, அவர்களுக்கும் அவனைப் பிடித்திருந்தது. பெர்த்தை, அவன் தூரத்தில் மஞ்சள் மணல் வெளி

வும் நடிக்கலானான். அவள் எழுதிய கடிதங்களில் ஒன்றைக் கூட அவன் திறந்து பார்க்கவில்லை. ஒவ்வொரு வாரமும் அவன் அவளுடைய கிறுக்கிய எழுத்துக்களைக் காணநேர்ந்தது; அப்பொழுதெல்லாம் அவள்மீது அவனுக்குத் தீராத ஆத்திரம் மூண்டெழும். அவள் கடிதங்களை உடைக்காமல் அப்படியே இரண்டாகக் கிழித்து வீசி விடுவான் அவன்.

அவனது இரண்டாம் காதல் துணையைக் கைப்பிடிக்கமுயன்ற அவன் ஆசைக்கனவு அடுத்த வசந்தத்தில்தான் நிறைவேறியது.

மேமாதத் தொடக்கத்தில் அவர்கள் திருமணம் பாரிஸில் நடந்தது. வழக்கமாகச் செல்லும் 'ஹனிமூன்' பழக்கம் அவர்கள் திட்டத்தைவிட்டு நழுவியது. விருந்தான பிறகு நடனத்திற்கும் தயாரானார்கள். வீட்டிலேயே தம் 'முதல் இர'வைக் கழிக்க இளந்தம்பதிகள் மனம் விரும்பினார்கள். மறுநாள் காலை அவர்கள் சந்தித்துக் காதல்கொண்ட கடற்கரைக்குப் போகவும் நினைத்தார்கள்.

இரவு வந்தது. ஹாலில் அவரவர்கள் நடனமாடிக் கொண்டிருந்தார்கள். புதிதாக மணமான இணையான இவ்விருவரும் தனியறையொன்றில் சந்தித்தார்கள். ஆடம்பரமாக உடுத்தியிருந்தார்கள். உச்சியில் தொங்கிநின்ற விளக்கு சிதறிவிட்ட ஒளித்திவலைகள் அறையில் தேங்கிவிட்டிருந்தன.



நீண்ட ஜன்னல் திறந்திருந்தது. அதிலிருந்து நல்ல காற்று இழைந்துவந்தது; அவர்களுக்கு இதமாக இருந்தது.

அவர்கள் ஒன்றும்பேசவில்லை. அவர்கள் கைகள் ஒன்றோடு ஒன்று இணைந்திருந்தன. வாழ்வின் இந்தமாற்றம் கண்டு அவள்மருண்டாள்; அவள் விழிகள் சுணக்கண்டு கொண்டிருந்தன. அவன் முறுவல் பூத்தான்; உலகம் முழுதுமே மாறிவிட்டதுபோல அவளுக்குத் தோன்றிற்று; ஏனெனில் அவளுடைய வாழ்வுத் திருப்பம் அப்படி அவளை நினைக்கச் செய்தது. காரணம் சொல்ல மாட்டாத களிவெறி உடலெங்கும் உள்ளமெங்கும் பாய்ந்தது; பரவியது.

நிலைத்த புன்னகையுடன் அவன் அவளையே கவனித்தான்; பேச விரும்பினான்; வார்த்தைகள் தட்டுப்படவில்லை. அமைதியாகிவிட்டான். அவன் உள்ளம் பற்றியிருந்த அந்தக் கரங்களின் பிணைப்பில் பிடிகொடுத்துப் பேசியிருக்குமோ?

அவ்வப்போது "பெர்த்!" என அவன் விளிக்கையில், கனிவுப்பார்வை கனவாக மிளிர அவள் கண்களை மலர விழித்துப் பார்ப்பாள் அவனை. அவர்கள் இருவரும் மாறிமாறிப் பார்த்துக் கொள்ளுவார்கள். அவள் அழகில் மயங்கி அவன் கண்கள் தாழ்ந்துவிடும்.

காலம் கரைந்தது.

ஒரு பக்கக் கதவு திறந்தது. தூதன் கொண்டுவந்த ஓர் அவசரக் கடிதம் அவனுக்கு வந்தது. ஜாக்ஸ் அதைத் தொடும் போதே நடுங்கினான்; நெடு நேரம் மேல் உறையையே பார்த்துக் கொண்டிருந்தான். அதன் கையெழுத்தை அவனால் அனுமானிக்க முடியவில்லை; அதைப் பிரிக்கவும் துணிவில்லை; படிக்கவும் விருப்பமில்லை. ஆனால் அதன் உறைக்கோடியில் கோடிட்டு எழுதியிருந்த 'மிகவும் அவசரம்' என்ற சொற்கள் அவனைத் திணற அடித்தன. உறையைக் கிழித்துப் படிக்கலானான். அவன் தலையை நிமிர்த்தியதும், அவனுடைய உருவம் மாறிவிட்டிருந்தது.

"அன்பே, என் நண்பனுக்குப் பெரிய ஆபத்து வந்து விட்டது; என் வாழ்விலும் அக்கரை கொண்டவன். இருபது நிமிஷத்தில் அவனைப் பார்த்துவிட்டுத் திரும்பி வருகிறேன்."

பெர்த் "போய்வாருங்கள்" என்று சம்மதம் சொன்னாள், சில கண நேர ஓய்வுக்குப் பின்.

அவன் மேலணி, தொப்பி இவற்றை எடுத்துக்கொண்டு மாடிப்படி இறங்கினான். தெருவில் சென்ற நேரத்தில் விளக்குக் கம்பத்தடியில் நின்றவாறு அவன் மீண்டும் அக்கடிதத்தைப் படித்தான்.

"ஐயா,

உங்கள் மாஜி மனைவியான ராவெட் இன்று ஒரு குழந்தைக்குத் தாயாகியிருக்கிறாள்; அது தங்களது என்று உறுதி கூறுகிறாள். அவள் மரணப் படுக்கையில் இருக்கிறாள். உங்களைக் காணப் பெரிதும் ஆசை அவளுக்கு. பரிதாபத்துக்குரிய இப்பெண்ணின் கடைசி ஆசையை நீங்கள் நிறைவேற்றுங்கள்.

டாக்டர் பொனாட்"

இறக்கும் தருவாயிலுள்ள அவள் அறையினுள் நுழைந்த போது, அவனுக்கு அவளைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. நர்சுகள் சிலர் அவளைக் கண்காணித்துக்கொண்டிருந்தார்கள். மெழுகுவர்த்தி மேஜையில் எரிந்துகொண்டிருந்தது. படுக்கைக்குப் பின் குழந்தை அழுதது. அதன் அழுகை ஓலம் கேட்டவுடன், தாய் அவள் ஐஸ் வைத்திருக்கும் தலையணையை விட்டெழுந்து தலையை நீட்டிக் குழந்தையைப் பார்த்தாள்.

அவள் உடலினின்றும் ரத்தம் பீறிட்டுக்கொண்டிருந்தது, பிரசவத்தின் காரணமாக. அவள் வாழ்வு நழுவக் காத்திருந்தது; உயிர் பதைத்துக்கொண்டிருந்தது.

அவள் ஜாக்ஸை நினைவுபடுத்திக்கொண்டதும், கையை உயர்த்த எத்தனித்தாள். அவள் கன்னங்களில் வெம்மை பெற்ற கண்ணீர் வழிந்தது.

உணர்ச்சி வசப்பட்டவனாக அவன் அவளது கரங்களைப் பற்றிக்கொண்டு அவற்றில் முத்தமிட்டான். உலர்ந்து வாடிய முகத்தை மெல்ல அண்டினான். அவன் கை உணர்வுபட்டதும் அவள் முகம் நடுங்கியது.

"அன்பரே, நான் சாகப்போகிறேன். இறுதிவரை என்னுடன் தங்குவீர்களா? இந்தக் கடைசி நேரத்திலும் என்னைக் கைநழுவ விட்டுவிடாதீர்கள்" என்று செருமியவாறு அடித்தொண்டையில் தணிவுடன் விண்ணப்பித்துக்கொண்டாள் அவள்.

அவன் அவளது நெற்றியை, தலைமயிரைப் பெருமூச்சுடன் முத்தமிட்டான்.

"நான் உறுதியாகத் தங்குவேன்"

"இந்தக் குழந்தை உங்களுக்குப் பிறந்தது. தெய்வத்தின் பேரில், என் இதயத்தின்மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன். இது முற்றும் உண்மை. நான் உங்களைத் தவிரப் பிறிதொரு ஆடவனை நேசிக்கவில்லை. குழந்தையைக் காப்பாற்றுவதாக உறுதி கூறுங்கள்"

அவளைத் தன்கைகளால் ஏந்தியணைத்தவாறு "அன்பே, நம் குழந்தையை நான் அன்புடன் வளர்ப்பேன். இது உறுதி" என்றான் ஜாக்ஸ். ஆனந்தம் நிரம்பிற்று அவளுக்கு இந்த வார்த்தைகளைக் கேட்டதும். அவனை முத்தமிடத் தலையைத் தூக்கினாள். அதை வரவேற்று அவன் தலையைத் தாழ்த்திக் கொண்டான்.

"நான் கண்டுகளித்து அமைதி பெற நீங்கள் இப்போதே நம் குழந்தையை எடுத்துக் கொள்ளுங்கள்."

அவன் தொட்டிலண்டை சென்று குழந்தையை எடுத்துக் கொண்டான். அவர்களுக்கிடையே அதைக் கிடத்தினான். அது அழுவதை நிறுத்தியது.

மரணப்பிடியில் துடித்துக் கொண்டிருந்த அவளுடைய ஒருகையையும், காதலின் துடிப்பில் தத்தளித்தவாறிருந்த மற்றொரு கையையும் அவன் பற்றியிருந்தான். அவளைக் கண்



காணித்திருந்த அவனுக்கு முன்னல் இரவு நழுவிக்கொண்டிருந்தது.

டாக்டர் ஓய்வுபெறச் சென்ருர். வார்டுகளைச் சுற்றி நின்ற நர்சுகளும் நாற்காலிகளில் கண்ணயர்ந்தனர். குழந்தை உறங்கியது. அதன் அன்னையின் கண்களும் மூடின — மீளாத உறக்கமா?

கிழிந்த திரையைக் கிழித்துக் கொண்டு காலைக்கதிர்கள் பாய்ந்தன. அப்பொழுது வந்த நர்சுகள் அவளைக் கண்டதும் "இறந்துவிட்டாள், பாவம்" என்ருர்கள்.

மறுபடியும் அவன் காதலியை ஆழ்ந்து நோக்கிவிட்டு, மேலணியைக்கூட மறந்து அதே மாலை உடையுடனேயே குழந்தையை ஏந்தியபடி ஓடினன்.

தனித்திருந்த அந்த இளம் பெண் பொர்த் வெகுநேரம் அவனுக்கெனக் காத்திருந்தாள். அவன் வராதது கண்டு, ஓய்வறைக்குச் சென்றுவிட்டாள். அவள் தோற்றம் அடியோடு மாறிவிட்டிருந்தது. அவள் மனம் அஞ்சி நடுங்கியது.

இன்னும் அவள் அவனுக்காகக் காத்திருந்தாள். அவளது காதலனைப்பற்றிக் கேட்டவர்களிடம் ஏதோ கடிதம் வந்ததாகவும், விரைவில் வந்துவிடலாம் என்றும் சொன்னுள். விருந்தாளிகள் சென்றுவிட்டார்கள். உறவினர்மட்டும் இருந்தார்கள். நள்ளிரவிலே மணப்பெண்ணைப் படுக்கையில் அமர்த்தித் தேற்றிக் கொண்டிருந்தார்கள் பெற்றோர்கள். அவள் காதலனைப் பற்றி விசாரிக்கப் போலீஸ் தலைமை நிலையத்துக்கு அவள் தந்தை சென்ருர். ஐந்து மணி அளவில் மெல்லொலி மாடியில் கேட்டது. கதவு திறந்து மூடப்பட்டது. பிறகு அறையின் அமைதியைக் கலைத்து அழுகைச் சப்தம் கேட்டது. அங்கே ஜாக்ஸ் கையில் குழந்தையுடன் நின்று கொண்டிருந்தான். ஓடிச்சென்ற பெண்களை விலக்கிவிட்டு முன்னல் போன பொர்த் அவனிடம் "என்ன இது? யாருடைய குழந்தை? சொல்லுங்கள்" என்று வினவினுள், பதட்டம் பரிமாறிய குரலில்.

தன் வசமிழந்தவனுனன் அவன்; இதயம் அடித்துக் கொண்டது.

"குழந்தை--என்னுடையது--அதன் தாய் சற்றுமுன் இறந்துவிட்டாள்"

அவன், குழந்தையை அவளிடம் சமர்ப்பித்தான்.

பொர்த் மறுமொழி எதுவும் கூருமல் குழந்தையை ஏந்தி அதை மார்புறத் தழுவி அணைத்துக் கொண்டாள். பிறகு, கணவனிடம் திரும்பி நீர்முட்டிய கண்களுடன் "இதன் அன்னை இறந்துவிட்டாளா?" என்ருள்.

"ஆமாம்; சற்றுமுன் தான் அவள் மாண்டாள். சென்ற கோடையில் அவள் உறவை நான் துண்டித்துக் கொண்டேன். டாக்டர் எனக்குக் கடிதம் அனுப்பினூர்..."

"இது இனி நம் குழந்தை; நாமே அன்புடன் வளர்ப்போம்" பொர்த் அன்பு வழியக் கூறினுள்!

[மூலம் : மாப்பஸான்]

# 61 Persons are awarded prizes in our puzzle No. 7 (1st prize 18, 2nd prize 2, 3rd prize 34 and 5th prize 7 persons)

**Full particulars are published in the Rainbow dated *25-4-52***

ரிஜிஸ்டர் ரெ. 277

# ரூ. 25,000 பரிசு

போட்டி ரெ. 9

MS Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப் பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர் களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியானவிடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000 முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு *5*-ம் பரிசு ரூ. 1000 அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும். மேற்கண்ட பரிசுகள் எங்கள் கம்பெனியின் நிபந்தனைப்படி வசூலுக்கு தகுந்தபடி பகிர்ந்து கொடுக்கப்படும்.


AMBAL'S PUZZLES

KEYS NO 7 21 TO 36=114

| | | | |
|---|---|---|---|
| 28 | 33 | 21 | 32 |
| 30 | 23 | 35 | 26 |
| 31 | 22 | 34 | 27 |
| 25 | 36 | 24 | 29 |

We hereby certify that the above is the solution in original deposited with us by Ambal's Puzzles No 7 on 20/3/52 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank

For The Premier Bank of India Ltd.

V Ramaswamy 16-4-52

Agent, Madras

## முடிவு தேதி 13-5-52 விடை 28-5-52

பிரவேசக் கட்டணம் : கூபன் *1*-க்கு ரூ. *1-0-0* 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5-0-0

**122**



விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 23 முதல் 38 வரையுள்ள எண் களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இட மிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் 122 வரும்படி யாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோ கிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுபபலாம. மணியார்டா செய்த ரசீதைக் கூபனகளு டன் சோதது அனுபப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவது மாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும், அல்லது 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

# AMBAL PUZZLE NO. 9

28 (14) Thandavaraya Gramani Street, Tondiarpet, MADRAS - 21

# சுகந்தியின் புடவை

நா. ஜெகநாதன்

மணமாகி, மாதம் இரண்டாகி, கணவனோடு தனிக்குடித்தனம் நடத்தி, இன்பத்தின் எல்லையை எட்டிப்பிடித்தபிறகு, ஒரு கவலை-கவலை அல்ல — கணவனது நடத்தையையே சந்தேகிக்கும்படியான ஒரு புதிர், அவளுக்குப் புரியாமல் போய்விட்டது. அவள் முகத்தில் களிப்பு மறைந்து, கவலையின் ரேகைகள் பரவத் தொடங்கின.

அந்தப் புடவை தன் கணவனின் பீரோவில் எப்படி இடம் பெற்றது? எப்படி இடம் பெற்றிருக்கக் கூடும். ஒரு சமயம் தன் கணவனுக்கும் வேறு யாராவது ஒரு பெண்ணுக்கும் தொடர்பு இருந்திருக்கக் கூடுமோ? இல்லாவிட்டால் பெண் வைத்துக் கொள்ளும் அப்பொருள் அங்கே, அவரது பீரோவில், காகிதப் பொட்டலத்தில், அழகாக மடித்து வைக்கப்பட்டிருக்குமா? அப்படியானால் தன்னை அவர் காதலிப்பதாகவும், தன்னைத் தவிர வேறு எவரையுமே கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன் என்றும் கூறியதெல்லாம் பொய்யா? ஆண்களே இப்படித்தானா?

தன் கணவனின் பீரோவில் அந்தப் புடவையைப் பார்த்த பிறகு, சுகந்தியின் மனம் சுக்கு நூறாகிச் சிதைந்துவிட்டது. ஆசை அத்தானை மணந்து கொள்ள அவள் பட்ட பாடென்ன? இன்று அனுபவிக்கும் வேதனை என்ன? அதை அவர் தனக்காக வாங்கி வந்திருந்தார் என்றால் இன்னமும் ஏன் தன்னிடம் கொடுக்காமல் வைத்துக்கொண்டிருக்கிறார்? அவளும் சென்ற ஒரு மாத காலமாக அது அந்த இடத்தில் இருந்து வருவதை நன்றாகக் கவனித்து வந்திருக்கிறாள். தான் மணமாகிக் கணவனோடு வந்து தனிக்குடித்தனம் ஆரம்பித்து, அதைப் பீரோவில் பார்த்ததுமுதல் இன்றுவரை அது அங்கேயே இருப்பதைக் கவனித்திருக்கிறாள். அன்று முதல் அவள் தன் கணவனோடு சரிவரப்பேசுவதில்லை; அலங்காரம் செய்துகொள்வதில்லை; அழுக்குப் புடவையைக் களைந்து, அழகான புடவையை அணிந்து, அன்போடு கணவனை வரவேற்பதில்லை; இவைஎல்லாம் கிருஷ்ணசாமிக்கு வியப்பாக இருந்தன. திடீரென்று தன் மனைவியின் மனம் மாறக் காரணமென்ன? ஆசையைக் கொட்டி, அன்பு மொழி பேசும் சுகந்தி ஆயிரம் தடவை கேட்டாலும், தன் கவலைக்குக் காரணம் என்ன என்பதைச் சொல்ல மறுத்தது அவனுக்கு மனவேதனையைத் தந்ததில் வியப்பில்லை அல்லவா?

இப்படிப் பலநாட்கள் சென்றன. ஒருநாள் இதற்கு முற்றுப்புள்ளி வைத்துவிடுவ

தென்று முடிவு செய்துகொண்ட கிருஷ்ணசாமி "சுகந்தி!" என்று ஆசையோடு அழைத்தான். அவள் வரவில்லை. மறுமுறையும் அன்போடு அழைத்தான். ஊஹூம். அடுத்தமுறை அதட்டிப் பார்த்தான். அப்போதும் அவள் வரவில்லை. அவனாகவே எழுந்து அவள் அறைக்குச் சென்றான். அழுதவள்போல் அவள் முகம் வீங்கிக்கிடந்தது. 'இவளா சுகந்தி? சுந்தரவடிவமாகக் காட்சியளித்து, சொக்குப்பொடி போட்டுத் தன்னைக் கவர்ந்து, மணந்துகொள்ளும் நிலைக்குக்கொண்டுவந்த அவளா இந்தச் சுகந்தி?'

அவள் பக்கத்தில் அமர்ந்து, அவள் தலைமயிரைக் கோதியவாறு "சுகந்தி, உனக்கு என்ன உடம்புக்கு? டாக்டரை அழைத்துக்கொண்டு வரட்டுமா?" என்று அன்போடு கேட்டான்.

"போதும், போதும் உங்கள் அன்பு!" என்று கூறி எழுந்து உட்கார்ந்துகொண்டாள்.

"என்ன சுகந்தி! கொஞ்ச நாளாக உன் நடத்தை விபரீதமாய் இருக்கிறதே! என்னோடு பேசுவதேயில்லை. எங்கே கூப்பிட்டாலும் வரமாட்டேன் என்கிறாய். உனக்கு என்ன வந்துவிட்டது? சொல்லமாட்டாயா?" என்று ஆவலாகக் கேட்டான்.

"ஆமாம். என் நடத்தை விபரீதமாய்த்தான் இருக்கும். உங்க நடத்தையைவிட என்னுடையது கெட்டா போய்விட்டது...?" என்றாள்.

"சுகந்தி! எது வாய் அதிகமாய்ப் போய்விட்டது? என் நடத்தையில் என்ன தவறு கண்டுபிடித்துவிட்டாய்? நான் கெஞ்சக் கெஞ்ச, நீ என்னையே சந்தேகிக்க ஆரம்பித்துவிட்டாயே? பேஷ்!..." என்று ஆத்திரத்தோடு பேசினான் அவன்.

"நான் நிரூபிக்கட்டுமா?..." என்றாள் சுகந்தி.

"ஆகா பேஷாக!" என்று கூறிய கிருஷ்ணசாமிக்குத் தன் மனைவி எதையோ சந்தேகக் கண்ணோடு பார்த்துவிட்டாள், அதனால்தான் தன்னோடு ஒரு மாதிரியாக இருக்கிறாள் என்று அப்போதுதான் புரிந்தது.

"ஆமாம்! உங்கள் பீரோவில் ரொம்ப நாளாக ஓர் அழகான புடவை மடித்து வைக்கப்பட்டிருக்கிறதே! அது எது? யாருக்குப் பரிசாகக் கொடுக்கப் போகிறீர்கள்? என்னைக் காதலித்துக் கல்யாணம் செய்துகொண்ட நீங்கள் இப்படி என்னை மறந்துவிட்டு வேறொருத்தியோடு..." என்று சுகந்தி முடிப்பதற்குள் கிருஷ்ணசாமி குறுக்கிட்டான்.

"போதும் நிறுத்து!..." என்று கூறிக் கலகலவென்று சிரித்துக்கொண்டே தன் அறைக்குச் சென்று பீரோவிலிருந்த அந்தப் பொட்டலத்தை எடுத்துக் கொண்டுவந்து, மனைவியின் அருகில் உட்கார்ந்து அதைப் பிரித்தான்.

அந்தப் பொட்டலத்தில் ஓர் அழகான புடவை மடிப்புக் கலையாமல் சலவை செய்தபடியே

மடித்து வைக்கப்பட்டிருந்தது. சிவப்பு நிறத்தில் பெரிய பெரிய இலைகள் வெள்ளை வர்ணத்தில் போடப்பட்டிருந்த வாயில் புடவை அது!

"சுகந்தி! இந்தப் புடவையைக் கண்டுதானே என் நடத்தையையே சந்தேகிக்க ஆரம்பித்தாய்?......'இது யாருடைய புடவை, எப்படி என்னிடம் வந்திருக்கக்கூடும்?' என்று சிறிது நேரம் யோசனை செய்து பார்த்திருக்கக்கூடாதா? இந்தப் புடவை யாருடையது என்பது உனக்கு இன்னமும் ஞாபகத்திற்கு வரவில்லையா?" என்று குறும்புப் புன்னகை உதட்டோரத்தில் தவழ, சுகந்தியைப் பார்த்துக் கேட்டான்.

"போதும்! ஊரில் இருக்கிற பெண்கள் புடவையில் யாருடையதோ இது! என்னைக் கேட்டால் எனக்கென்ன தெரியும்?" என்று கூறி முகத்தைத் திருப்பிக் கொண்டாள் சுகந்தி.

"இவ்வளவுதானா நீ? நான் உன்னை என்னவோ பெரிய மேதாவி என்று நினைத்தல்லவா கல்யாணம் செய்துகொண்டேன்?"

"ஆமாம் ஊரார் புடவையை யாருடையது என்று கண்டு பிடிக்கத் தெரியாவிட்டால் நான் மக்குப்போலும்" என்று கூறிய சுகந்தியின கண்களில் நீர் நிறையத் தொடங்கியது.

சுகந்தியின் சந்தேகம் சிறிது கூட விலகவில்லை என்பதையும், இனியும் அவளைச் சோதிக்கக் கூடாது என்றும் உணர்ந்து கொண்டான் கிருஷ்ணசாமி.

"உனக்கு ஞாபகசக்தி அவ்வளவுதான். சுகந்தி, இது உன் புடவை! நன்றாக யோசித்துப் பார்! இரண்டு வருடங்களுக்கு முன்னால் நீ எந்தப் புடவை கட்டிக்கொண்டிருந்தாய் என்பதை யோசித்துப் பார்! அந்தப் புடவை என்னவாயிற்று என்பதை..." என்று கிருஷ்ணசாமி அடுக்கிக்கொண்டே போனான்.

சுகந்தி, "என்ன? இது என் புடவையா?" என்று கூறியபடியே அந்தப்புடவையை எடுத்துப் புரட்டிப் பார்த்தாள். மேலும் கீழும் பார்த்தாள்; பார்டரைப் பார்த்தாள்; முந்தானையைப் பார்த்தாள்; முந்தானையின் முனையில் 'எஸ்' என்ற ஆங்கில எழுத்து எழுதப்பட்டிருந்ததையும் பார்த்தாள். அவள் முகத்தில் ஆச்சரிய ரேகைகள் படரலாயின! கண்கள் விரிந்து சேர்ந்தன. அவள் மனத்தில் பழைய நிகழ்ச்சிகள் உருப்பெற்றன.

★

கிருஷ்ணசாமி சென்னையில் ஒரு பெரிய ஆங்கிலேயக் கம்பெனியில் உத்தியோகத்திலிருந்தான். சுகந்தி வீட்டுக்குப் பக்கத்து வீட்டில்தான் அவன் வசித்து வந்தான். சுகந்திக்கும் அவனுக்கும் உறவு; இருவருக்கும் மணம் செய்வதெனத் திட்டமும் இருந்தது. கல்யாணம் நிச்சயமான பிறகு, கிருஷ்ணசாமியின் நெருங்கிய உறவினர்

ஒருவர் காலமாய்விட்டதால், கல்யாணம் நிறுத்தப்பட்டு விட்டது. ஏனோ, சுகந்தியின் தகப்பனார் மகளுக்கு வேறு இடங்களில் வரன் தேடலானார். மேலும் இந்தச் சமயத்தில் ஒரு வழக்கு சம்பந்தமாகத் தன் சொத்துக்களையெல்லாம் இழந்து விட்டார் கிருஷ்ணசாமியின் தந்தை. ஆகவே, கிருஷ்ணசாமிக்குச் சுகந்தியைக் கொடுப்பதில்லை என்ற முடிவிற்கு வந்தார் சுகந்தியின் தந்தை.

காதலர் இருவரும் இம்முடிவு கேட்டு மனமுடைந்தனர். சுகந்திக்குத் தன் தந்தையை எதிர்க்கத் துணிவில்லை. பாவம்! கிருஷ்ணசாமிக்கோ சுகந்தியை அவள் தந்தையிடம்சென்று கோரப் பணம் இல்லை. எனவே, இருவரும் ஒருவரை ஒருவர் மறந்துவிட முடிவு செய்தார்கள்.

சுகந்திக்கு ஒரு பெரிய பணக்காரரின் மகனைப் பார்த்துக் கல்யாணத்திற்குவேண்டிய ஏற்பாடுகளைத் தடபுடலாகச் செய்ய ஆரம்பித்தார் அவள் தகப்பனார். கிருஷ்ணசாமிக்கு இவைகளை எல்லாம் பார்க்கப் பார்க்க மனம் உடைந்துவிடும் போலிருந்தது. ஆபீசுக்கு ஒருமாதம் லீவு எழுதிப் போட்டுவிட்டு எங்கேயாவது ஊர்ப்பிரயாணம் செய்வதென்று முடிவுகட்டினான்.

கிருஷ்ணசாமியின் அறைக்கு எதிரேதான் சுகந்தியின் அறை இருந்தது. அவளது அறைக்கு





**பையன் :** (படிக்கிறான்) புலி உறுமிற்று....சிங்கம் கர்ஜித்தது-பாம்புகள் நெளிந்தன.
**தாயார் :** கண்ணு, இந்தப் பாடத்தை நாளைக்குப் படிக்கலாம். இப்போ வேறே பாடம் படிடா.

எதிரில் இருந்த திறந்த வெளியில் தான் சுகந்தி புடவையைக் கொடியில் உலரப்போடுவதற்கு வருவாள். முன்பெல்லாம் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகை புரிந்துகொள்வார்கள். விழுங்கிவிடும் வேல் விழிகளால் கிருஷ்ணசாமியைப் பார்ப்பாள் சுகந்தி. காதளவு நீண்ட அவளது கயற்கண்களைக் கண்டு மகிழ்ந்து சிரிப்பான் அவன். இதழோரத்தில் ஒரு சிரிப்புக் காட்டி, அவன் உயிரையே கொள்ளைகொண்டு போய்விடுவாள் அவள். ஆனால் இப்போதோ......! சுகந்தி என்றோ சிலநாட்களில்தான் மாடிக்கு வருவாள். அவளது முகத்தில் மலர்ச்சியே இராது. ஆனால் ஒரு நீண்ட பெருமூச்சு—தம் காதல் மரம் ஆணிவேரற்று அடி பெயர்ந்து விழுந்ததே என்பதைக் குறிப்பிடும் பெருமூச்சு அங்கிருந்து வரும். கிருஷ்ணசாமி பதிலுக்கு ஒரு பெருமூச்சு விடுவான்.

கல்யாணத்திற்குக் குறிப்பிட்ட நாள் நெருங்கிக்கொண்டிருந்தது!

தன் காதல் சிதைந்துவிட்டதே என்ற வருத்தத்தால் வாட்டப்பட்ட கிருஷ்ணசாமி துரும்பாய் இளைத்துவிட்டான். நிம்மதியாக ஊர்ப்பிரயாணத்திற்கு ஏற்பாடுகளைச் செய்யலானான்.

திடீரென்று தன் முற்றுப்பெறாத முதல் காதலின் அடையாளமாகச் சுகந்தியிடமிருந்து ஏதாவது பொருளைப் பெற வேண்டுமென்ற விபரீத ஆசை அவனுக்கு உண்டாயிற்று.

அன்றிரவு மாடியில் பிரமை பிடித்தவன்போல் உலவிக்கொண்டிருந்த கிருஷ்ணசாமியின் கண்களில் அடுத்த வீட்டு மாடியில், சுகந்தி காலையில் உலரப்போட்டிருந்த புடவை காற்றில் அசைந்தாடிக் கொண்டிருந்தது தெரிந்தது. கிருஷ்ணசாமி ஓடிச்சென்று அந்தப் புடவையைத் தொட்டான்; உடலெல்லாம் புல்லரித்தது; உள்ளம் புளகாங்கிதமடைந்தது. சுகந்தியின் பொன்மேனியை அணைக்கும் பெருமைபெற்ற

புடவை அல்லவா அது? உடனே அந்தப் புடவையை எடுத்துக்கொண்டு அறைக்கு வந்து, அதை நன்ருக மடித்துப் பத்திரமான இடத்தில் வைத்த பிறகே அவன் மனம் ஆறுதலடைந்தது. இந்தப் புடவையாவது தன் கருகிய காதலின் சின்னமாக இருக்கட்டுமே என்ற நினைப்பு அவனுக்கு!

மறுநாள் காலை ரயிலுக்குப் புறப்பட்டுக்கொண்டிருந்தபோது அடுத்த வீட்டிலிருந்து எதிரொலித்த "எங்கே போய் விடும் அது? எப்படிப் பறந்து போய்விட்டது? இருபத்தி அஞ்சு ரூபாய் கொடுத்து வாங்கினதாச்சே? எந்தப்பயல் திருடிப்போய்விட்டானே?" என்ற சொற்கள் கிருஷ்ணசாமியின் காதுகளில் பாய்ந்தன. அந்தக் கடைசி வாக்கியம் அவன் உள்ளத்தை உடைத்துவிடும்போல் இருந்தது!

ஒருமாத காலம் கோட்டயம் ஆலப்புழை, திருவனந்தபுரம் முதலான நகரங்களை எல்லாம் சுற்றிப் பார்த்துவிட்டுக் காதல் கவலைகளை எல்லாம் மறந்திருந்த கிருஷ்ணசாமிக்குத் தான் சென்னைக்குப் போகவேண்டும் என்ற நினைப்புத்தோன்றியதும் பழைய கவலைகள் தோன்றி அவன் உள்ளத்தைப் புண்படுத்தத் தொடங்கின. மணமாகித் தன் கணவனின் இல்லத்திற்குச் சென்றிருப்பாள் சுகந்தி, ஆகவே அவள் நினைவு தோன்ருது என்று நினைத்துத்தான் கிருஷ்ணசாமி தன் அறைக்குச் சென்று டிரங்குப்பெட்டி முதலானவைகளை இறக்கினுன். நிமிர்ந்து பார்த்ததும், தன் அறைக்கு எதிரே சுகந்தி பழையபுன்முறுவலுடன், தன்னையே விழுங்கிவிடுபவள்போல் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டான். தன்னைக் கண்டதும், அவள் ஓடுவதைப் பார்த்தான். அவள் நடத்தை அவனுக்கு விபரீதமாகத் தோன்றியது. கல்யாணமான ஒருபெண் இப்படி நடந்துகொள்வாள் என்று அவன் எதிர்பார்க்கவேயில்லை. அவனுக்கு எல்லாமே ஒரு புதிராக இருந்தது.

புதிருக்குமேல் புதிராக அவனுடைய குடும்பத்தினர் அனைவரும் அடுத்த ரயிலிலேயே வந்திறங்கினுர்கள். அவனுடைய தகப்பனுரை அழைத்துக் கொண்டு சுகந்தியின் தகப்பனுர் எங்கேயோ வெளியில் சென்ருர். நான்கு மணிநேரம் கழித்துத் தான் இருவரும் வீடுதிரும்பினுர்கள். வந்ததும் அவர் தன் தாயிடம், "பந்தல் போடவேண்டியதுதான்" என்று கூறியதைக் கேட்டுக் கிருஷ்ணசாமி திகைத்துப் போய்விட்டான்.

"கிருஷ்ணசாமி, நீ கொடுத்து வைத்தவன்தான்" என்ருள் அவன் தாய்.

"எப்படி?" என்று கேட்டான் கிருஷ்ணசாமி.

"உனக்குக் கல்யாணம் நிச்சயமாய் விட்டது!" என்ருள்.

"பெண் யாரம்மா?" என்ருன் அவன்.

"ஒன்றும் தெரியாத மாதிரி கேட்கிறாயே!...... சுகந்திதான் உன் மனைவி!" என்றாள் அவள்.

"என்ன! சுகந்தியா! அவளுக்குக் கல்யாணமாய் விட்டதே!" என்றான் வியப்போடு.

"அடபாவமே! உனக்கு ஒன்றும் தெரியாதுபோலிருக்கிறது! சுகந்தியை உனக்குக் கொடுப்பதில்லை என்று நிச்சயம் செய்தபிறகு வேறு யாரையோ வரனைத் தேர்ந்தெடுத்தார்கள் அல்லவா? பணக்கார வீட்டுப் பிள்ளைகளுக்கே உரித்தான சில குணங்கள் அவனிடமிருந்தனவாம்; நல்லவன் அல்ல என்றும் தெரிந்ததாம். 'இதென்ன ஒன்றுகூடப் பொருத்தமில்லாமல் போய்விடுகிறதே' என்று மனம் சலித்துக்கொண்டே சுகந்தியின் தகப்பனார் கடைசியில் உனக்கே கொடுப்பதாக ஒப்புக்கொண்டு கடிதம் எழுதியிருந்தார். நாங்களும் இங்கே புறப்பட்டு வந்தோம். புரிந்ததா?" என்றாள். 'கடைசியில் தன் சுகந்தி, தனக்கே கிடைக்கப் போகிறாள்'—கிருஷ்ணசாமிக்குத் தான் இந்த உலகத்தில்தான் இருக்கிறோமா என்ற சந்தேகம் வந்துவிட்டது.



"கண்ணு, வலைவாசி இறங்கறமாதிரி இறங்கி வந்துடடா சீக்கிரம்"

பழைய நிகழ்ச்சிகளில் மூழ்கியிருந்த சுகந்தியைக் கிருஷ்ணசாமியின் குரல் நனவுலகத்திற்கு இழுத்துவந்தது.

★

"சுகந்தி! இந்தப் புடவை ஒருகாலத்தில் எனக்கு இன்பம் தந்தது. இடையில் நம் இன்பத்தைக் கெடுத்தது. இனி நமக்கு என்றும் இன்பமே தரும். எங்கே இந்தப் புடவையைக் கட்டிக்கொண்டு என் எதிரே வா, பார்க்கலாம். உன் பொன் மேனிக்கு இந்தப் புடவை பொருந்துகிறதா என்று பார்க்கிறேன்" என்றான் கிருஷ்ணசாமி.

அடுத்த நிமிடத்தில் அந்தப் புடவையைக் கட்டிக்கொண்டு வந்த வடிவழகியான சுகந்தியைக் கண்டு அவன் மனம் எல்லையற்ற இன்பமுற்றது!

# விலக்கப்பட்டவள்

[காஸிம் பஜாரிலுள்ள பங்களா, கிழக்கிந்தியக் கம்பெனியாரின் கேளிக்கைகளுக்கும், விருந்துகளுக்கும் இருப்பிடமாக இருந்தது. ஆனால், அது உண்மையில், சுராஜ்-உட்-டௌலாவை ஒழிப்பதற்குச் சூழ்ச்சிகளும், சதிகளும் நிகழுமிடமாக விளங்கிற்று. வங்காள நவாபின் பரந்த புகழை அழிப்பதற்காக, அபாண்டமான பொய்களும், 'அவன் ஒரு குடிகாரன், கூத்திக் கள்ளன், பொறுப்பற்றவன், அரசாளத் தகுதியற்றவன்' என்றும் குடிமக்கள் நம்பும்படியாக, கிழக்கிந்தியக் கம்பெனியார் அவதூறுகப் பிரசாரம் செய்து வந்தார்கள். அத்துடன் நிற்கவில்லை அவர்கள். அழகிய பெண் அலியா என்பவளைச் சுராஜின் துப்புகளை அறியும் பொருட்டுத் தங்கள் ரகசியப் போலீஸில் ஒற்றுளாக நியமித்தும் இருந்தார்கள்.

அலியா என்பவள் பார்ப்பன வகுப்பில் பிறந்தவள். சில அசந்தர்ப்பங்களால் அவள் ஜாதியைவிட்டு விலகும்படி நேர்ந்தது. அவள் அரசனுக்குக் கேடு நினைக்கவில்லை. அவள் வாழ்க்கை ஓடுவதற்கும் பணம் சம்பாதிப்பதற்கும் அந்த உத்தியோகம் ஒரு சுலபமான வழியாக இருந்தது. அவளது பெண்மையும், முகக் கவர்ச்சியுள்ள அவளை ஒரு வெற்றிகரமான உளவாளியாக ஆக்கும்என்று கம்பெனியார் நம்பியிருந்தனர்.]

[இடம்: அரசவை, காலம்: நள்ளிரவு]

[சுராஜ் அமைதியாக வருகிறான். சிம்மாசனத்தின் முன் சற்று நேரம் நிற்கின்றான். பிறகு முழங்காலிட்டுப் பணிகிறான்.]

சுராஜ்: "தான் இறந்தாலும் தன் புகழ் இறவாத அலிவர்டிகான் அவர்களே, வங்காளம், பீகார், ஒரிஸ்ஸா முதலிய நாடுகளை ஒரு குடையின்கீழ் அரசாண்ட என் அருமைத் தாத்தா அவர்களே, நீங்கள் கிழக்கிந்தியக் கம்பெனியாரிடம் விழிப்புடன் இருக்கும்படி என்னை அறிவுறுத்தினீர்கள். நான் தங்களின் அபாய அறிவிப்பை இன்னும் மறக்கவில்லை. படை பலத்துடன்தான் இருக்கிறேன். தாத்தா, இருந்தாலும், நீங்கள் நான் சொல்லியதை அப்பொழுதே கவனித்திருந்தால் இப்போதுள்ள நிலைமை ஏற்பட்டு இருக்காது. மீர்ஜாபர் குழப்பம் விளைவிக்கக் காத்துக்கொண்டிருக்கிறான். மகாராஷ்டிரர்கள் படையெடுக்கத் தயாராக இருக்கிறார்கள்.

"அரச சபையின் அந்தஸ்து அப்படியே அகன்றுவிட்டது. நம்பிக்கை இருக்க வேண்டிய இடத்தில், நாசம் நர்த்தனம் புரிகிறது, அன்பு அரசுபுரிய வேண்டிய இடத்தில், அழிவு தலைவிரித்துத் தாண்டவமாடுகிறது.

"தாத்தா—இருந்தாலும் என் பலம் உள்ளவரையில் எதிரிகளை எதிர்த்துப் போராடுவேன். ஏற்கனவே காலம் கடந்துவிட்டாலும், தைரியத்தைக் கைவிடாமல் காலனின் கால்களில் தஞ்சமடைவேனே தவிர, பகைவர்களின் கைகளில் சிக்க மாட்டேன். கவலைப்படாதீர்கள்... என் மூச்சு உடம்பில் ஓடிக்

நாடகம்:
கரு. இராமநாதன்

கொண்டிருக்கும் வரையில் எதிரிகளை எவரானாலும் என் அருமைத் தாயகம் வங்காளத்தில் கால்வைக்க விட மாட்டேன். நீங்கள் சாகும் தருவாயில்கூட இதைநினைத்து எவ்வளவு வருந்தினீர்கள். நீங்கள் அருமை வங்காளத்தின்மேல் கொண்டுள்ள பற்றுதலை அறுதியிட்டுக் கூற முடியாது. சில சமயங்களில் தாய் நாட்டை எண்ணிச் சமாதியில்கூடத் தங்கள் ஆத்மா சாந்தியடையாமல் கலங்கிக் கொண்டிருக்கும் என்று நினைக்கிறேன்......

"எனக்குச் சென்ற நான்கு நாட்களாக நல்ல சாப்பாடு, தூக்கமே கிடையாது. இந்தச் சந்தர்ப்பத்தில் என்ன செய்வது என்று எனக்குப் புரியவில்லை. தயவுசெய்து நீங்கள்தான் வழி காட்டவேண்டும்.

"......ஆம்,நீங்கள் என் ஆணையைக் காப்பாற்றச் சொல்கிறீர்கள். தாத்தா, என் உயிர் கொடுத்தாவது அருமை வங்காளத்தை எதிரிகளின் கைகளிலிருந்து காப்பாற்றப் பார்ப்பேன்"

[அங்கு மறைந்து நின்று, சுராஜின் பேச்சைக் கேட்ட அலியா அப்படியே உருகிவிடுகிருள். அரண்மனைக்கு எதற்காக வந்திருக்கிரும் என்ற காரணத்தையும் மறந்துவிடுகிருள். கவனமின்றி அவளுடைய கை பக்கத்திலுள்ள பூ ஜாடியின்மேல் பட்டு அது கீழே விழுந்து உடைகிறது. சப்தம் கேட்டுச் சுராஜ் அவள் பக்கம் திரும்புகிருன்]

சுராஜ் : யார்......அங்கே? (அலியா பயத்தால் நடுங்குகிருள்; சுராஜ் அவளை நோக்கி வருகிருன்) நீ யார், இந்த இரவில் இங்கு உனக்கென்ன வேலை?

அலியா : ஜகன்பன்ஞ, உங்களைப் பார்ப்பதற்காகத்தான் வந்தேன்.

சுராஜ் : (அவள் அழகைக் கண்டு மயங்கிவிட்டவன்போல, அவளைக் கூர்ந்து கவனிக்கிருன்) இந்த அர்த்தராத்திரியில், அதுவும் என்னைச் சந்திப்பதற்காக வந்திருக்கிருய்! உன் பெயர்...!

அலியா : அலியா, ஜகன்பன்ஞ

சுராஜ் : அலியா...! அழகான பெயர்—உன்னைப்போல அழகியை நான் இதற்குமுன் பார்த்ததில்லையே. இந்த அந்தப்புரத்தில் எவ்வளவு நாட்களாகத் தங்கி இருக்கிருய்?

அலியா : அந்தப்புரத்துப் பெண் அல்ல நான், ஜகன்பன்ஞ.

சுராஜ் : பின் எங்கிருந்து வருகிருய்...?

அலியா : தங்கள் அரண்மனைச் சுவர்களுக்கு அப்பாற்பட்ட உலகிலிருந்து.

சுராஜ் : வெளிஉலகிலிருந்து! காவலாளிகள் உன்னைத் தடை செய்யவில்லையா?

அலியா : அவர்கள் என்னைக் கவனித்திருந்தால் தடுத்திருப்பார்கள். அவர்களை ஏமாற்றி விட்டு உள்ளே நுழைந்து விட்டேன்.

சுராஜ் : ...எதற்கு? என்னைப் பார்ப்பதற்கு, இல்லையா?

அலியா : இல்லை ஐயா, தங்களைப் பார்ப்பதற்காக அல்ல. அரசர்களுக்கெல்லாம் அரசஞன சுராஜ்—உட்—டௌலாவைச் சந்திப்பதற்காக. இப்போது

அவளை நான் சந்தித்துவிட்டேன்.

சூராஜ்: அலியா, நான் இன்னும் உன்னைத் தெரிந்துகொள்ளவில்லையே. குழப்பமும் அமைதியின்மையுமுள்ள இந்த நேரத்திலே, உன்னைப்போன்றவர்கள் இங்கு வருவது எனக்குச் சந்தேகத்தை உண்டாக்குகிறது. அந்தப்புரத்திலுள்ள நீக்ரோவைக் கூப்பிட்டு உன்னைக் கைது செய்து நாளை நியாயசபைக்குக் கொண்டுவரச் சொல்லப் போகிறேன்.

அலியா: கைது...என்னையா! (உரக்கச் சிரிக்கிறாள். சூராஜ் அவள் அருகே நெருங்குகிறான்)

சூராஜ்: உன்சிரிப்பு எவ்வளவு இனிமையாக இருக்கிறது! எங்கே கற்றுக்கொண்டாய் இப்படிச் சிரித்துப் பிறரை மயக்குவதற்கு...?

அலியா: ஏன்...நீங்கள் இந்த மாதிரிச்சிரிப்பைத்தங்கள் அந்தப்புரங்களில் கேட்டதே இல்லையா?

சூராஜ்: இல்லையே...

அலியா: மதுக்கிண்ணம் தரும் நடனமாதர்களிடமிருந்து கூடவா...! தங்கள் மகாராணிகளிடமிருந்துகூடக் கேட்டதில்லையா...!

[சூராஜ் கோபத்தால் புருவத்தை நெறிக்கிறான்]

அலியா: ஜகன்பன்னு, தயவு செய்து என்னை மன்னித்துவிடுங்கள், இம்மாதிரித் தங்கள் ராணிகளை ஒப்பிடுவதற்கு.

சூராஜ்: இல்லை...இல்லை. உன் மேல் எனக்கு ஒரு கோபமும் இல்லை. உன்னைப்போல் சிரிப்பதற்கு ராணிகளாலும் முடியாது, நடனக்காரிகளாலும் முடியாது. இந்த இந்தியா முழுதுமே உன்னைப்போல் சிரிப்பதற்கு யாருமில்லை.

அலியா: ஏன், ஜகன்பன்னு?

சூராஜ்: ஏனு? அவர்களெல்லாம் அழப் பிறந்தவர்கள். அழுவதே அவர்கள் தலைவிதி என்றெழுதியிருக்கும்போது அவர்களால் எப்படிச் சிரிக்கமுடியும்?

அலியா: இந்த அழுகைக்கெல்லாம் காரணம் என்ன ஜகன்பன்னு?

சூராஜ்: என் கொடுங்கோன்மையும், நீதியற்ற ஆட்சியும்தான் காரணம் என்று எதிரிகள் கூறுகின்றனர். ராஜ விசுவாசமுள்ள அரச சபையினரே இவ்வாறுதான் எண்ணுகின்றனர். என் குடிமக்களும் இப்படித்தான் நினைக்கின்றனர். அவர்களுடைய ஒருமித்த கூக்குரலில் என் குரலும் சேர்ந்தே இருக்கிறது.

அலியா: நான் அவ்வாறு தங்களை நினைக்கவில்லையே...ஜகன்பன்னு.

சூராஜ்: நீ அவ்வாறு நினைக்கவில்லை...ஆனால்...தெய்வ பக்தியும், மூடநம்பிக்கையும், அருமை வங்காளத்தின் அழிவுக்கு வித்தாக இருக்குமானால், அதற்கு நான் பொறுப்பாளியல்ல. அலியா, சூராஜின் நிழல் எங்கே படுகிறதோ, அங்கே புல் பூண்டெல்லாம் பட்டு, கருகி, தரை தீய்ந்துவிடும் என்று நீ கேள்விப்பட்டதில்லையா?

அலியா: இந்த நாட்டில் புரட்சியின் புயலும், அரசைக் கவிழ்க்கச் சூழ்ச்சியும்தான் நடைபெறுகின்றன என்று கேள்விப் பட்டிருக்கிறேன். மக்களெல்லாம் மன்னனின் சிம்மாசனத்தைப் பசிக்கண்களுடனும், ஒட்டிய வயிறுகளுடனும்தான் பார்க்கிறார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் ஒருவருக்காவது, உங்களுக் கெதிராகத் தலை தூக்குவதற்குத் துணிவும் தைரியமும் இருப்பதாக நான் கேள்விப்பட்டதில்லை.

சுராஜ்: ஓ... அலியா.. உனக்கு அரசியல் ஞானமும் உண்டுபோலிருக்கிறதே. ஆயிரக்கணக்கான மக்கள் பசிக்கண்களுடன் என்னை நோக்குகிறார்கள் என்பதும் தெரிந்திருக்கிறதே. உன்பேச்சு, 'நீ யார்; எங்கிருந்து வருகிறாய்' என்பதை யெல்லாம் விபரமாக அறியும்படி என்னைத் தூண்டுகிறது.

அலியா: நான்...யார்? இன்னும் சில நாட்களில் உங்களுக்கு தானே தெரியப்போகிறது. காஸிம் பஜார் பங்களாவில் நடக்கும் சதியைப் பற்றித் தங்களுக்குத் தெரிவிக்கவே வந்தேன்.

சுராஜ்: சதியா...?

அலியா: நாளை அதிக ஆடம்பரத்துடன் ஒரு பெரிய விருந்து நடக்கப்போகிறது.

சுராஜ்: ஆடம்பரத்துடன் விருந்தா...!

அலியா: ஆம், ஜகன்பன்னா. நாளை பாட்டுக் கச்சேரிகள், நடனக்கச்சேரிகள் எல்லாம் உண்டு. மீர்ஜாபர்கூட நாளை வருவார்.

சுராஜ்: சேனாதிபதிக்கு இந்தக் கேளிக்கைகளிலும், கூத்துக்களிலும் அதிக விருப்பம். இந்த மாதிரி விருந்துகளுக்கு அவர் போகத்தவறுவதே இல்லை. அலியா, உன்னைச் சில கேள்விகள் கேட்க விரும்புகிறேன். கேட்கலாமா?

அலியா: நன்றாகக் கேளுங்கள்.

சுராஜ்: இவ்வளவு நேரம் நீ என்னுடன் இருந்தும் இன்னும் நீ என்னைப்பற்றி அறிந்து கொள்ளவில்லையே, அலியா.

அலியா: இல்லை, ஜகன்பன்னா.

சுராஜ்: பின் எப்படி உனக்குத் தெரிந்திருக்கும் இந்தச் சிறு விஷயங்களெல்லாம் வங்காள நவாபுக்குத் தெரியாது என்ற முடிவுக்கு வந்தாய்?

அலியா: உங்கள் எதிரிகள் இந்த ரகசியத்தைத் தங்களுக்கு மறைக்க முயன்றிருப்பார்கள் என்று நினைத்தேன்.

சுராஜ்: முயற்சியினால் ரகசியத்தை மறைத்துவிட முடியுமா? உன்னால் உன்னை மறைத்துக் கொள்ள முடிகிறதா, அலியா?

அலியா: ஐயோ... என்னைத் தெரியுமா?

சுராஜ்: நீ பகைவர்களின் உளவாளி என்னும் உண்மையை உன்னால் மறைக்க முடியுமா?

அலியா: அ...ல்...லா...

சுராஜ்: உன்னை அனுப்பியவர்கள், சுராஜ் அழகிற்கு அடிமையாகி விடுவான் என்று எண்ணி

யிருக்கிறார்கள். அவர்களுக்கு விரோதமாக நான் என்னென்ன செய்கிறேன் என்று அறிந்து போகத்தானே வந்திருக்கிறாய்? உன்னுடைய அழகில் என் அறிவை நான் இழக்கவில்லை. ஆனால் உன் சிரிப்பு என்னை மயக்கிவிட்டது. ஆகையினால் என்னுடைய அந்தப்புர அறையில் இன்றிலிருந்து நீ கைதியாக இரு. இரகசியங்களைத் தெரிந்து கொண்டு வெளியில் போக அனுமதிக்கப்படமாட்டாய்.

அலியா: நீங்கள் என்னைத் தவறாகக் கருதுகிறீர்கள்... ஜகன் பன்னா, நான் எதிரிகளின் உளவாளியல்ல.

சுராஜ்: பின்னர், சரி இந்த அரண்மனையில் ஒரு சிநேகிதியைப் போல வாழ உனக்கு வசதி உண்டு.

அலியா: நீங்கள் எண்ணுவது போல, நான் இங்கிருப்பது அவ்வளவு எளிதல்ல... ஜகன் பன்னா, எனக்கு வாழ்க்கையில் இன்னும் எவ்வளவோ காரியங்கள் நடக்கவேண்டியிருக்கின்றன.

சுராஜ்: அலியா, இன்றிலிருந்து உன் காரியங்களுக்கெல்லாம் வங்காள நவாப் பொறுப்பு ஏற்றுக்கொள்வார்.

அலியா: ஜகன்பன்னா, தயவு செய்து என் மேல கருணை காட்டுங்கள். எவ்வளவோ கஷ்டங்களுக்கும் கவலைகளுக்குமிடையே இது வரையில் என்னுடைய 'தன்மானம்' ஒன்றை மட்டும் நான் இழந்ததில்லை. கருணைகூர்ந்து என் கற்பை மட்டும் களங்கப்படுத்தி விடாதீர்கள் [நிற்கச்சக்தியற்றுச் சுராஜின் காலடியில் விழுகிறாள்]

சுராஜ்: எழுந்திரு. நான் கேளிக்கைகளிலும், கூத்துக்களிலும், கெட்ட நடவடிக்கைகளிலும் என் காலத்தைக் கழிப்பதாக விரோதிகள் நினைக்கிறார்கள். இந்த நிலையில் நான் உன்னை வெளியே விட்டால் என்னைப் பற்றிய உண்மைகளை அவர்கள் அறியமாட்டார்களா? நீயே சொல். இந்தச் சந்தர்ப்பத்தில் உன்னை வெளியே விடலாமா?

அலியா: நான் எவ்வாறு உங்களுக்குப் பகைவர்களின் உளவாளி இல்லை என்பதை நிரூபிக்கப் போகிறேன்?

சுராஜ்: அரச விசுவாசத்துக்கு ஒரு அத்தாட்சி! உன்னால் எதவும் காரணம் காட்டி அரச விசுவாசத்தை நிரூபிக்க முடியாவிட்டால், நீ என்னை ஏமாற்றத்தான் வந்திருக்கிறாய் என்பது நிச்சயம். அந்த மாதிரிக் குற்றத்துக்கு என்ன தண்டனை தெரியுமா?.......மரணம்.... (மரணம் என்னும் வார்த்தையைக் கேட்டவுடன் அலியா விழுந்து விழுந்து சிரிக்கிறாள்) வாயை மூடு... சிரிப்பதற்கு இது நேரமல்ல. நியாயம் வழங்கும் சமயத்தில் வங்காள நவாப் இந்த மாதிரி அசம்பாவிதங்களைச் சகிக்கமாட்டான்.

அலியா: நிச்சயம் என் அரச விசுவாசத்துக்கு அத்தாட்சி காண்பிக்கிறேன். ஜகன்பன்னா, உங்கள் படைத்தலைவர்கள் என்னை அறிவார்கள்.

## எதிர்பார்த்ததும் வந்ததும்!




சுராஜ்: மோகன்லாலுக்கு உன்னைத் தெரியுமா?

அலியா: தெரியும்.

சுராஜ்: சரி (கூப்பிடுகிறார்) அங்கே யார்? (ஒரு காவலாளி உள்ளே நுழைகிறான்)

சுராஜ்: (காவலாளியிடம்) மோகன்லாலை வரச்சொல், (காவலாளி வெளியே செல்கிறான்) உன்னை மோகன்லாலுக்கு—எவ்வளவு நாட்களாகத் தெரியும்? (அலியா மௌனம் சாதிக்கிறாள்) மோகன்லால் என்ன சொல்லப போகிறாரோ என்று யோசிக்கிறாயா அல்லது வேறு வழியில் தந்திரமாகத் தப்பிச்செல்வதற்கு உன் மூளை வேலை செய்கிறதா......ஏதோ......நீ உன் அரச விசுவாசத்தைச் சரியான காரணங்கள் காட்டி நிரூபிக்கா விட்டால், உலகத்திலுள்ள எவராலும் உன் உயிரைக் காப்பாற்ற முடியாது......மோகன்லால்கூட. (மோகன்லால் வருகிறார்) மோகன்லால், உங்களுக்கு இந்தப் பெண்ணைத் தெரியுமா......? (அலியா தலையைக் குனிகிறாள். மோகன்லால் ஆச்சரியத்துடன் அவளைக் கவனிக்கிறார்.)

அவளை நன்றாகப் பார்த்துப் பின்னர் பதில் சொல்லுங்கள். உங்கள் பதிலில் அவள் உயிர் ஊசலாடுகிறது.

[அலியா மோகன்லாலுக்கு ஏதோ சைகை காண்பிக்கிறாள்—சுராஜ் தன் முகத்தை அந்தப்பக்கம் திருப்பின சமயம் பார்த்து.]

மோகன்லால்: எனக்கு இந்தப் பெண்ணைத் தெரியாது, ஜகன்பன்னா...

சுராஜ்: மோகன்லால், இந்தப் பெண்ணின் நெஞ்சுரத்தைப் பார்த்தீர்களா? தைரியமாக நடு இரவில் என் அரண்மனையில் நுழைந்ததுமின்றி, என்னைப் பற்றிய இரகசியங்களையும் துப்பறிந்துகொண்டு தப்பித்துச் செல்ல நினைக்கிறாள். என் சேனைத் தலைவர்களில் நீங்கள் மிக நம்பிக்கையானவர். உங்களைக்கூட இவள் சந்தேகப்படும்படி செய்துவிட்டாளே!

(நான்கு சேவகர்கள் உள்ளே நுழைகிறார்கள்)

சுராஜ்: (அவர்களிடம்) இவளைக் கூட்டிச் செல்லுங்கள். இரவு சிறையில் வைத்திருந்து, காலையில் கோட்டைக்கு எதிரே சிரச்சேதம் செய்யுங்கள். நவாபின் ஆணைப்படி எதிரியின் உளவாளி தண்டிக்கப்பட்டாள் என்று ஊர் பூராவும் பறை சாற்றுங்கள்.

(சேவகர்கள் அவளைக் கூட்டிச் செல்ல ஆயத்தமாகிறார்கள். மோகன்லாலின் முகம் பழுப்படைகிறது. சேவர்களை நிறுத்துகிறான்)

மோகன்லால்: (மிகுந்த பிரயாசையுடன்) ஜகன்பன்னு... எனக்கு... இந்தப் பெண்ணைத்... தெரியும். அவள்......என்... தங்கை......

சுராஜ்:......இந்த நாடோடி! ...உங்கள் தங்கையா!!......... மோகன்லால்...!!!

மோகன்லால்: ஆம்; ஜகன் பன்னு! போர்த்துகீசியச் சிப்பாய்கள் ஒருதரம் அவளைத் தூக்கிக் கொண்டு ஓடிவிட்டனர். அதிலிருந்து அவள் எங்கள் குடும்பத்துக்கு வரவே இல்லை. நாங்களும், எங்கள் சமூகமும், அவளை ஜாதியிலிருந்தே விலக்கி விட்டோம்.

சுராஜ்: முதலில், அவளைத் தெரியுமா என்று கேட்டபோது, ஏன் இதைப் பற்றிக் கூறவில்லை?

மோகன்லால: எனக்கு...... சொல்ல...வெட்க...மாக...இருந்தது. ஜகன்பன்னு... அதனால்...

சுராஜ்: மோகன்லால் இதற்கு முன் நீங்கள் என்னிடம் பொய்யே சொல்லியதில்லை. உண்மையைக் கூறுங்கள். ஏன் தங்கள் தங்கை விஷயத்தை என்னிடம் மறைத்தீர்கள்?

மோகன்லால்: ஜகன்பன்னு, இந்தப் பெண் கிழக்கிந்தியக் கம்பெனியின் துப்பறியும் உளவாளி.

சுராஜ்: உங்கள் தங்கை...கம்பெனியின் உளவாளி... அதுவும் இந்த அர்த்தராத்திரியில் என் அரண்மனையில்.

மோகன்லால்: ஜகன்பன்னு, ஒருதரம் அவள் சுராஜின் சிங்காதனத்தில்பதித்திருக்கும் பவழங்களையும், வைரங்களையும் பார்க்க வேண்டுமென்று என்னிடம் ஆசைப்பட்டாள். ஆனால், அவள் எவ்வாறு இன்று உள்ளே நுழைய முடிந்தது என்பது எனக்குத் தெரியாது.

சுராஜ்: (அலியாவிடம்) என்னுடைய சிம்மாசனத்தைப் பார்த்துவிட்டாயா...?

அலியா: மிக விலை உயர்ந்த வைரத்தைப் பார்க்க முடிந்தது. ஊர் எல்லாம் யாரைக் குடிகாரன்

என்றும் கூத்திக்கள்ளன் என்றும் நாக்கில் நரம்பில்லாது திட்டியதோ, யாரை மதுவை அருந்திவிட்டு மங்கையர்களை மானபங்கம் செய்து மனம் களிப்பவன் என்று திட்டியதோ— அந்த மன்னனை இந்த நடுச் சாமத்தில் தூங்காமல் கண் விழித்து, தன் நாட்டின் நலத்துக்காகக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கும் சுராஜ்-உட்-டௌலாவைக் காணும் பாக்கியம் கிடைத்தது. நான் சிம்மாசனத்தைப் பார்க்க வந்தேன். அதிர்ஷ்ட வசமாகத் தேசப் பற்றும், கன்னியர்களின் கற்பைச் சூறையாடிக் காற்றில் பறக்கவிடாமல் காக்கும் பெருமை படைத்த அரசரையும் காணும் பாக்கியம் பெற்றேன்.

சுராஜ்: நடு இரவில் அரண்மனையில் உலவும் பகைவர்களின் உளவாளிக்குக் கொடுக்கும் தண்டனை இன்னதென்று உனக்குத் தெரியும், அலியா. இருப்பினும் உன்னைத் தண்டிக்க நான் விரும்பவில்லை. நீயோ மோகன்லாலின் தங்கை. அவரோ—என் வாழ்வின் சுகதுக்கங்களில் பங்கு கொண்டவர். அவர் உடலில் ஓடும் அரசவிசுவாசமுள்ள இரத்தம் உன் உடம்பிலும் ஓடும் என்று நினைக்கிறேன்- நீ பகைவர்களின் உளவாளியாக இருந்தாலும், உன் தேசப்பற்று நம் நாட்டை அவர்கள் வசப்படுத்த உதவாது என்று நினைக்கிறேன். (மோகன்லாலை நோக்கி)

மோகன்லால், உங்கள் சமூகத்தின் [illegible] அதிசயமாக இருக்கிறது. உங்கள் சொந்தத் தங்கை அவளுடைய குற்றமும் அல்ல—அவள் சில கொடிய மனிதர்களின் கைகளில் சிக்கி விட்டாள் என்பதற்காக அவள் வாழ்க்கையைச் சீரழிய விடுவதா? உங்களிலிருந்தே அவளைத் தள்ளி ஒதுக்கிவிடுவதா? வாழ்வுச் சக்கரம் உருளுவதற்காக அவள் பகைவர்களின் உளவாளியாவதா? உங்கள் தங்கை என்று உரிமையுடன் கூறுவதற்குக் கூடத் தயங்குகிறீர்கள்!

நீங்கள் நாட்டுக்கு நன்மை செய்கிறீர்கள், வழக்குகளில் தீர்ப்பு வழங்குகிறீர்கள். ஆனால் சொந்த வீட்டில் நடப்பதையும், உங்கள் சமூகத்தில் நடக்கும் அநீதிகளையும் தீங்குகளையும் களைவதில்லை. நீங்களும்... உங்கள் சமூகமும்...

(அலியாவிடம்)

நாடு நான்கு திக்குகளிலும் பகை மேகங்களால் சூழப்பட்டிருக்கிறது. எல்லாப்பக்கமும் புரட்சியும், சூழ்ச்சியும் தாண்டவமாடுகின்றன. நம் தாய்நாடு உதவியற்றுச் சோர்ந்த நிலையிலிருக்கிறது. அலியா, உனக்கு நம் தாய்நாட்டை அன்னியர்களின் அடிமை விலங்குகளில் மாட்டவேண்டுமென்ற ஆசை இருக்குமானால் நன்றாகச் செய்... வா, நானே உன்னை மோகன்லால் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறேன்.

[திரை]

(ஆங்கில நாடகத்தைத் தழுவியது)

Edited, Printed and Published by Murugu Subramanian for Ponni Ltd., at Ponni Achakam, 16, Seni Amman Koil Street, Tondiarpet. Madras-21

அச்சுத் தொழில் வளருகிறது. எல்லாவற்றையும் அச்சிலேற்றிக் காண மனிதன் எண்ணும் நாள் இது. எனவே அச்சகங்களிலே வேலைகளை முடித்துக் கொடுப்பதில் நெருக்கடி ஏற்படுகிறது. என்றாலும் வாடிக்கைக்காரர்களுக்கு குறித்த தவணையில் கலைப்பண்பு, புதுமை, உயர்வு திகழ அவற்றைத் திட்டமிட்டு முடிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள நாங்கள் காத்திருக்கிறோம்!


விவரங்கட்கு:

# பொன்னி அச்சகம்

16, சேணியம்மன் கோவில் தெரு

தண்டையார்ப்பேட்டை :: சென்னை—21

Regd. No. M. 4849 PONNI

MADRAS

விருந்து இலக்கிய வரிசையில் இதுவரை எட்டுப் புத்தகங்கள் வந்திருக்கின்றன. மலையாளம், ஆங்கிலம், வங்காளி, ஜப்பானியம், இந்தி, சீனம், ருஷியம் ஆகிய மொழிகளில் திகழும் இலக்கியச் செல்வங்கள் அவை!

பதிப்பாசிரியர் : பன்மொழிப்புலவர் **கா. அப்பாத்துரை M. A. L. T**

**இதுவரை ஒன்பது புத்தகங்கள்**
**வெளியாகி இருக்கின்றன.**

# 9

மகாகவி பவபூதியின் சமஸ்கிருத நாடகம்

# மாலதி-மாதவன்

**வெளியாகிவிட்டது-இப்பொழுது எங்கும் கிடைக்கும்**

**தனிப்பிரதி அணா 8**

எல்லாப் புத்தகங்களும் தொடர்ந்து பெற விரும்புவோர்
— 12 புத்தகங்களுக்கு ரூ. 6 அனுப்பவேண்டும் —

விவரங்கட்கு :

## பொன்னி லிமிடெட்,

— சென்னை – 21 —